விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் தரத்தில் முதன்மையான சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 14 வெள்ளிக்கிழமை (28.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

# மகிந்தவுக்கு குழிபறிக்க கோத்தபாய முயற்சி!

## சிங்கள இணையம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தம்பியும் பாதுகாப்பு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு எதிராக குழிபறிக்கும் நோக்கில் இரகசிய காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக சிங்கள இணையத்தளம் ஒன்று அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

லங்கா ஈ நியூஸ் என்னும் பிரபல சிங்கள இணையத்தளமே இந்த பரபரப்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் சட்டச் சிக்கல்கள் இருப்பதால் அதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதும் கோத்தபாயவின் இலக்காக இருப்பதாக அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இணையத்தளத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கை நீதித்துறை சட்டக்கோவையின் பிரகாரம் நீதித்துறை மீது அழுத்தங்களைப் பிரயோகித்த எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. இது தொடர்பாக அரசியலமைப்பின் 111 (சீ) விதி தெளிவாக விளக்குகிறது.

இவ்வாறான நிலையில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தார். மேன் முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை அலட்சியம் செய்து ஷிராணி பண்டாரநாயக்க விவகாரத்தில் ஜனாதிபதி செயற்பட்டிருந்தார். மேலும் அதிகாரத்தைப் பயன் (19ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இருவர் நீக்கம்

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யப்படுவதை ஆதரித்து வாக்களித்தமைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடமேல் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் கொள்கையையும் தீர்மானத்தையும் நிலைப்பாட்டையும் மீறி வடமேல் மாகாண சபையில் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யப்படுவதை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணும் பெண்ணும் விருப்பத்துடன் அறையில் இருப்பது விபச்சாரமல்ல!

### சமன் சிகேரா வில்லங்கப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் கலாசார சீர்கேடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் போதியளவு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் விபச்சார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதாகவும் யாழ். சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதோடு விபச்சாரத்திற்கான விளக்கமும் பொலிஸாரினால் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் யாழ்.சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது.

இதில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி, யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா (19ஆம் பக்கம் பார்க்க)

## பத்தாயிரம் பிக்குகள் 13 ஐ நீக்கப் பேரணி

(கொழும்பு)

13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி சுமார் 10 ஆயிரம் பிக்குமார் கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர் என தெரியவருகின்றது.

நாடு முழுவதிலும் இருந்து பிக்குகளும் பிக்கு மாணவர்களும் கொழும்புக்கு சென்று ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்வார்கள் என்றும் 25க்கும் அதிகமான பௌத்த அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு வழங்குவதாகவும் கொழும் (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரபாகரன் பேச்சு; செல்வம் எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்பான பொது பல சேனா, மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு ஒப்பிட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

புலிகளின் அரசியல் பிரிவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் புதிய தலைவராகவும் புதிய பிரபாகரனாகவும் கத்தோலிக்க திருச்சபையின் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை செயற்பட்டுவருகிறார் எனபொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலபொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று (19ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா பலமுள்ளவராயின் ஜனாதிபதி மகிந்த வெட்கப்பட வேண்டியவர்

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக சத்தியப்பிரமாணம்செய்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அஞ்சி முன்னுக்கு வந்து "குரல் கொடுக்காததன் மூலம் மகிந்த ராஜபக்ஷவைவிட சந்திரிகா பலமுள்ளவர் என்பது தெளிவாகியுள்ளதாக பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

மகிந்தவைவிட சந்திரிகா பலமுள்ளவர் என்றால் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெட்கப்பட வேண்டியவர் எனவும் அவர் கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## முதல் ரக நீரிழிவுக்கு நோய் தடுப்பு மருந்து

### விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

நீரிழிவு நோயின் ஒரு வகையான முதல் ரக நீரிழிவு நோயில் மாற்றுவதற்கான நோய்த்தடுப்பு மருந்தின் மாதிரி பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிசோதனை வெற்றிகரமாக இருந்ததாக விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

80 நோயாளிகளில் நடத்தப்பட்ட இந்த சோதனை குறித்து நாடுகடந்த மருத்துவ விஞ்ஞான சஞ்சிகையில் வெளியான தகவல்கள், புதிய நோய்த்தடுப்பு மருந்து இதற் (19ஆம் பக்கம் பார்க்க)

அனுமதி இலவசம்

"அவளின் கதைகள்"
கண்காட்சி

வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்து வரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் சிங்களத் தாய்மார்களின் வாய்மூலக் கதையாடல்களின் கண்காட்சி

இடம்: Y.M.C.A மண்டபம், A-9 வீதி, யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமை)
காலம்: 28 ஜூன் 2013, காலை 10 மணி முதல் 12 மணிவரை ஆரம்ப நிகழ்வும் திறப்பு விழாவும்
கண்காட்சி நேரங்கள்: ஜூன் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
சர்வதேச இனத்துவக் கற்கை நிலையம்
(3136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கால் முறிந்த சிறுவனுக்கு 40 ஆயிரம் ரூபா நட்டஈடு

## நீதிமன்றம் உத்தரவு

(கரவெட்டி)

சிறுவன் ஒருவனை துவிச்சக்கரவண்டியில் மோதி விபத்துக்குள்ளாக்கி கால் முறிவை ஏற்படுத்திய நபர் 40 ஆயிரம் ரூபாயை சிறுவனுக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டது. வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் சம்பவ தினம் ஆறு வயது சிறுவன் வீதியால் சென்ற வேளை குறித்த நபர் வேகமாக துவிச்சக்கர வண்டியில் வந்து சிறுவனோடு மோதியதால் விபத்து ஏற்பட்டது.

இதனால் குறித்த சிறுவன் 19 நாட்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் பொலிஸாரின் இரு குற்றச் சாட்டுக்களான அவதானமின்றி செலுத்தியமை, இரு பக்க பிறேக் இன்றி செலுத்தியமை ஆகியவற்றிற்காக தலா 2 ஆயிரம் ரூபாயும் விபத்தை ஏற்படுத்தி காயத்திற் குள்ளாக்கியமைக்காக 40 ஆயிரம் ரூபாயும் நட்ட ஈடாக வழங்க வேண்டுமென நீதவான் உத்தரவிட்டார். (அ-24)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை தன்சானியாவை சென்றடைந்துள்ளார். ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற் கொண்டு ஜனாதிபதி தன்சானியா சென்றுள்ளார். இதனையடுத்து சிசெல்ஸிற்கும் அவர் செல்லவுள்ளார். இந்த இரு நாடுகளுக்கும் இலங்கையின் ஜனாதிபதி ஒருவர் முதன்முறையாக விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது.

# "மூவர் தமிழும் சைவ நெறியும்" ஆய்வரங்கம் இன்று தொடக்கம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நடத்தப்படும் "மூவர் தமிழும் சைவ நெறியும்" எனும் தலைப்பிலான ஆய் வரங்கு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வரங்கின் முதல்நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.45 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக மலேசியாவின் முன்னாள் பிரதியமைச்சர் டான் ஸ்ரீ குமரன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இவ் ஆய்வரங்கு தொடர்பான சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் தேவாரமும் சமய நடைமுறைகளும், தேவாரமும் இலக்கியமும், தேவாரமும் தத்துவமும் என்ற தலைப்புக்களின் கீழ் 14 அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இவ்ஆய்வரங்கின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 5 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நாள் நிகழ்வுகளில் பிரதம விருந்தி னராக புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம்.கே.பி. திஸநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது கடந்த வருட ஆய்வுக் கட்டுரை களின் தொகுப்பான இந்து சமயமும் அவை தீக நெறிகளும் எனும் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளதுடன் இந்நூலின் அறிமுகவுரை யை பேராசிரியர் மா.வேதநாதன் நிகழ்த்த வுள்ளார். (செ-5)

# அவுஸ். செல்ல முற்பட்ட படகுகள் மீள ஒப்படைப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை இன்பசிட்டி கடற்பரப்பினூடாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட இருநபர்களின் படகுகளையும் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித் துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இன்பசிட்டி கடற்பரப்பூடாக கடந்த மே மாதம் 12-ம் திகதி இரவு புத்தளம் கற்பிட்டி யைச் சேர்ந்த அன்ரனி நெப்போலியன், மேவின் பெர்னாண்டோ மற்றும் இன்பசிட்டி யைச் சேர்ந்த அஜந்தன், ஜெகன் ஆகிய நால்வரும் இணைந்து இரு படகுகளில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட் டனர்.

பின்னர் குறித்த நபர் நால்வரையும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னிலை யில் பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர். பின் குறித்த நபர்கள் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணை கடந்த 20-ம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றில் எடுத்துக் கொள் ளப்பட்டது.

இதன்போது படகு உரிமையாளர்கள் இரு வர் சிரேஷ்ட சட்டத்தரணி மு.சிவகுருநாதன் ஊடாக தமது படகுகளைப் பெற்றுத் தருமாறு மன்றைக் கோரினர்.

வழக்கை விசாரித்த நீதவான் இருநபர்களின் படகுகளை அவர்களிடம் ஒப்படைக்குமாறும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10-ம் திகதிவரை இவ்வழக்கை ஒத்திவைத்தார். (செ-24)


**பிள்ளையார் இன்**

*12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.*

**சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# சுயதொழில் முயற்சி பயிற்சிப் பட்டறை

## யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றம் ஏற்பாடு

வீட்டிலிருந்தவாறே நிறைந்த வருமானத் துடனும் சுயதொழில் ஒன்றினை குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக் கூடியவாறும் உள்ள குறுகிய கால பயிற்சிப் பட்டறை ஒன்றினை யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆடைத் தொழிற்துறையில் உள்ளோருக் கும் ஆடைத் தொழிற்துறையை ஆரம்பிக் கவுள்ள இளம் தொழில் முயற்சியாளர்களுக்கும் சிறந்த வாய்ப்பாக அமையும் இப் பயிற்சிப் பட்டறையானது எதிர்வரும் யூலை மாதம் 02-ம்,3-ம் மற்றும் 4-ம் திகதிகளில் நடை பெறவுள்ளது.

மேற்படி செயன்முறை விளக்கங்களுடன் கூடிய பயிற்சிப்பட்டறையில் சர்வதேச தகை மையுடைய வல்லுநர்கள் கலந்து கொண்டு பட்டறையினை நெறிப்படுத்தவுள்ளனர்.

சாறிகள் மற்றும் புடைவைகளில் மிகக் குறுகிய நேரத்தில் பல்வேறு கண்கவர் டிசைன்களில் ஸ்கிறீன் பிறின்டிங் செய்வது தொடர்பாகவும் மற்றும் புதிய தொழிநுட்ப பிரயோகங்கள் தொடர்பாகவும் சிறப்பான வகையில் தமிழ்மொழி மூலத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பின்றி இருக்கும் அனைவ ருக்கும் குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு மிகவும் பயனுள்ள மேற்படி பட்டறையில் தரம் வாய்ந்த உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்புக் களும் ஒழுங்கு செய்யப்படவுள்ளதுடன் சாத்தி யமான வகையில் நிதிசார் வசதிகளும் மேற் கொள்வதற்கு ஊக்கமளிக்கப்படும். எனவே மேற்படி பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றி சுயதொழில் ஒன்றினை ஆரம்பித்தலூடாக வேலையற்ற இளைஞர் மற்றும் யுவதிகள் தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவ தற்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.


சர்வதேசத் தகைமை வாய்ந்த செயன் முறை விளக்கம் வழங்கப்படவுள்ள இப்பயிற் சிப்பட்டறையில் பங்குபற்ற ஆர்வமுள்ளோர் இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண வர்த்தகத்தொழில் துறை மன்றத் தில் நேரடியாகவோ அல்லது 0212226609 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு [illegible] முடியும் என தலைவர் [illegible] தெரிவித்துள்ளார். (செ)








# மனதார வாழ்த்துகின்றோம்



எங்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுத்தந்த யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் மதிப்புக்குரிய திரு.அங்கஜன் இராமநாதன் அவர்களுக்கும். மற்றும் இணைப்பாளர் திரு.சீலன் அவர்களுக்கும். எமது மனமுவர்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு சகல சௌபாக்கியங்களோடு நீடுழி வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



வாழ்த்துவோர்..

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை.

வ.மிதூரன், அ.செந்தூரன், தி.இராகுலன், சி.தர்ஷா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனநிறைவு

ஓர் ஊரிலே ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பது அவரது விருப்பமாக இருந்தது.

தானே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆதலால், அரண்மனையைச் சுற்றி மரங்களை நட்டார்.

இதைப் பார்த்து மக்களும் தங்கள் வீடுகளிலும் மரக்கன்றுகளை நிறைய நட்டு வளர்த்தார்கள்.

அதனால் சிறிது காலத்தினுள் அவ்வூரே பசுமையாக மாறிவிட்டது.

ஒரு நாள் ராஜா தனது அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதம் விதமான மரங்களையெல்லாம் சென்று பார்த்தார்.

எந்தவொரு மரமும் சந்தோஷமாக இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு மரத்திற்கும் ஏதோவொரு வகையில் குறை இருந்தது கண்டறியப்பட்டது.

முதலில் அரசர் ஆலமரத்திடம் சென்றார். அது கூறியது... "மன்னா... நான் நன்றாகப் பெரிய மரமாகத் தான் வளர்ந்திருக்கிறேன்... நாலா புறமும் கிளைகளைப் பரப்பி நன்றாக படர்ந்துதான் இருக்கிறேன். இருந்தாலும் என்ன பிரயோசனம்? எனது பழம் மிகவும் சிறியதாக இருக்கிறது. என் கண்ணுக்கே அவை புலப்படமாட்டாது இருக்கிறதே. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன்" என்று ஆலமரம் புலம்பியது.

அப்படியே ராஜா அடுத்தபடியாக ஒரு அத்திமரத்திடம் சென்றார். அதுவும் புலம்ப ஆரம்பித்துவிட்டது.

"பழம் அழகாக இருக்கிறது... இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே. அத்திப்பழத்தைப் பிரித்துப் பார்த்தால்... அதனையும் சொத்தை என்று ஒரு பழமொழியே உண்டாகி விட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயரோடு தான் இருக்க வேண்டுமா? என்று வினவியது.

"சரி" இருக்கட்டும்... என்று கூறிவிட்டு வேப்ப மரத்திடம் சென்றார்.

"எனக்கு எவ்வளவோ மருத்துவக் குணங்கள் எல்லாம் இருப்பதாக பேசிக் கொள்கிறார்கள். இருந்தாலும் என்ன பயன்? என்னுடைய பழத்தை மக்கள் விரும்பி சாப்பிடுவதில்லையே!" என்று தெரிவித்தது.

ராஜா... அடுத்த படியாக இரு பனை மரத்திடம் சென்றார். "நான் நான்றாக உயரமாகத் தான் வளர்ந்திருக்கிறேன். மற்றைய மரங்கள் எல்லாம் என்னை அண்ணார்ந்து தான் பார்க்க வேண்டும்... இருந்தாலும் என்னிடம் நிழலுக்கு யாருமே வந்து ஒதுங்குவதில்லையே! என்று கூறி அது அலுத்துக் கொண்டது.

அடுத்த படியாக ராஜா 'ஓக்' மரத்திடம் சென்றார்.

ஓக் மரம் சொல்லியது, " இலையுதிர் காலத்தில் என் மீதுள்ள எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடி கொட்டிய மனிதர்களைப் போல மொட்டையாகத் தான் நிற்க வேண்டியுள்ளது... என்ன வாழ்க்கை இது? எல்லாம் என் தலையெழுத்து?"என்று கூறியது.

ராஜா யோசித்தார்... என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே மரங்கள் தான் காரணம். அவைகளால்தான் பூமியே செழிப்பாகவே இருக்கிறது. வீடு கட்ட, தளபாடங்கள் செய்ய மரங்கள் உபயோகப்படுகின்றன என்று தன்னகத்தே நினைத்தார்.

அப்போது அவ்விடத்தில் நின்ற ஒரு மகிழ மரம் அவர் கண்ணில் தென்பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் காட்சியளித்தது.

அது கூறியது மன்னா...இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ... வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால், இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்கு மகிழ்ச்சி... அதுவே எனக்கு பூரண திருப்தி என்றது மகிழமரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்த்து மணம் வீசும்.

மகிழமரம்போல மனத்திருப்தியுடன் வாழ்வதற்கு மனிதர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யாழில் பண மோசடி சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் பண மோசடி சம்பவங்கள் குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்ற போதும், முறைப்பாட்டாளர்களால் உரிய ஆதாரங்கள் சமர்பிக்கப்படாமையால் அவை பற்றிய நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்த யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்றி, சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் இடம்பெற்றது. இதில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் பங்கேற்றார். இதில்கலந்துகொண்டு உரையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த யாழ். வணிகர் கழகத்தினருடன் பொதுமக்களும் இணைந்து நேற்று முன்தினம் மாலை யாழ். பொது நூலகத்தில் வைத்து துவிச்சக்கர வண்டிகளுக்குஸ்ரிக்கர்களை ஒட்டினர். இதன் ஊடாக இரவு நேரங்களில் துவிச்சக்கரவண்டிகளில் செல்பவர்கள் வாகன விபத்துக்குள்ளாவதை தடுக்க முடியும்.

மேலும் தற்போது இந்த மாவட்டத்தில் பணமோசடி சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள்பதியப்பட்டு வருகின்றன.

ஆனால், பாதிக்கப்பட்டவர்களினால்உரிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாககுற்றவாளிகளை கண்டுபிடிக்கமுடியாத நிலை காணப்படுவதோடு குற்றத்தை நிரூபிக்க போதுமான ஆதாரங்களும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

மேலும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களும் இம்மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தவும் தடுத்து நிறுத்தவும் பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். பாதிப்புக்குள்ளான பின்பு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதனால் எந்தப்பயனும் இல்லை. எனவேபாதிப்புக்குள்ளாகும்முன்னமே பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர் முன்வர வேண்டும் என அவர்மேலும்தெரிவித்தார். (அ-6)

# இரவு நேர பேருந்துகளில் மதுபோதையில் பயணிக்கும் நபர்கள்- மக்கள் கடும் விசனம்

பேருந்தில் மது போதையுடன் பயணித்ததுடன் பயணிகளுடன் அங்கசேஷ்டையிலும் ஈடுபட்ட நபர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

சம்பவதினம் யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கி பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று இரவு 8 மணிக்கு புறப்பட்டது. பேருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே பேருந்துக்குள் இருந்த குறித்த நபர் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்ததுடன் தகாத செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். இது தொடர்பில் பயணிகள் சிலர் குறித்தநபரிடம் பேச முற்பட்ட போதும் சாரதியும் நடத்துநரும் அவரை எச்சரித்த போதும், அவர் களைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் அவர்களைக் கம்பியாலும் தாக்க முற்பட்டுள்ளார்.

இதனால் உடனடியாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு பேருந்தைசெலுத்திய சாரதி குறித்த நபரை மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தார். இரவு எட்டு மணிக்கு புறப்படும் இறுதி பேருந்துகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகமாக காணப்படுவதால், பெண்கள், சிறுவர்கள் இவ் இறுதி நேரப் பேருந்துகளில் பயணிப்பதற்கு பீதியடைந்து முச்சக்கரவண்டி மூலம் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

எனவே இது தொடர்பில் உரியவர்கள் நடிவடிக்கை எடுத்து பயணிகள் எதுவித பிரச்சினைகளுமின்றி பயணிக்க ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-160 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 100 |
| தக்காளி | 100 | 140 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 50 | 40 |
| கோவா | 160 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 100 | 140 | 160 |
| பூசணி | 50 | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 140-180 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 100 |
| பயற்றங்காய் | 70 | 50 | 60 | 50 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 160 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 400 | 200 |
| போஞ்சி | 120 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 25 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

**28.06.2013**
**(ஆனி 14, வெள்ளிக்கிழமை)**
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பஞ்சமி காலை 6.53 மணிவரை
சஷ்டி பின்னிரவு 5.31 மணிவரை
சதயம் முன்னிரவு 8.25 மணிவரை
இராகுகாலம் 10.25-11.25 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை

**மேடம்** வருமானம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்தகாரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான அறிகுறி தோன்றும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பால் மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, உதவுவதாகச் சொன்ன உறவினர் உங்களை விட்டு விலகலாம்

**சிங்கம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவினர் வருகையுண்டு, இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும், பயணங்களால் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், பகைவர்கள் விலகுவர், நிலையான வருமானத்திற்கு வழிகிடைக்கும், கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும், செல்வ வளம் பெருக கணபதியை வழிபடவேண்டிய நாள்.

**தனுசு** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாகமுடியும், பொருளாதார நிலை உயரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மகரம்** வாக்கு மேன்மையுண்டு, தொழிலில் அதிகபிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள், போசன சுகமுண்டு, வேலைச்சுமை கூடும்.

**மீனம்** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடத்தில் மது அருந்திய மூவருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)


பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மது அருந்திய மூவருக்கும் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் வெவ்வேறு இடங்களில் பொது இடத்தில் வைத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மது அருந்தியதாக குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

மூன்று நபர்களையும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவர்களை குற்றவாளிகள் எனக் கண்டு, மூவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (அ-6-24)









# அமைச்சரவைக்கு செல்கிறது கட்டாக்காலி நாய்கள் விவகாரம்

(யாழ்ப்பாணம்)

**கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட் டத்தில், சுவாரஸ்யமான முறையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளதோடு, அமைச்சரவையில் பேசப்படுமளவிற்கு இந்த விவகாரம் முக்கியப் படுத்தப்பட்டுமுள்ளது. பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பங்கேற்றார்.**







## நாளொன்றுக்கு 15 பேர் நாய் கடிக்கு இலக்காகின்றனர்

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் தலைமையில் இடம் பெற்ற இந்த சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்றி, யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஏனைய திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முதல் விடயமாக யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சிஉறுப்பினர் தீபன், "யாழ். மாநகரசபையினர் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து என்ன செய்கின்றனரோ தெரியவில்லை. ஆனால், கட்டாக்காலி நாய்களைப் பிடித்து ஒரு கிடங்கினுள் அடைத்து வைத்து அவற்றை பராமரிப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற செயல். அத்தோடு மாநகரசபை போன்று பிரதேச சபைகளினால் சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் முடியாது" என்றார்.

உடனே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாநகரசபை, கட்டாக்காலி நாய்களைப் பிடிக்க எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து யாழ். மாநகர சபை முதல்வரிடம் வினவிவிட்டு, மாநகர சபையினர் அந்த நடவடிக்கையை தத்துருவமாக செய்கின்றனர் எனக்கூற, உடன் எழுந்த யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் இரா.செல்வவடிவேல், "நாள் ஒன்றுக்கு நாய்க்கடிக்கும், பூனைக்கடிக்கும் இலக்கான நிலையில் 15 பேர் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இதனை யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளி விபரத் தகவல் உறுதிப்படுத்துகின்றது" எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் **பூனைக் கடிக்கும் கூட ஆட்கள் உள்ளாகின்றனரா?** எனக் கேட்க. இதற்கு ஆம் எனப் பதிலளித்தார் செயலாளர் செல்வவடிவேல். பதிலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா **புலிக்கடி போய்விட்டது. இப்போது பூனைக்கடி ஆரம்பித்துவிட்டதா?** என வினவ கூட்டத்தினர் பெரும் சிரிப்புடன் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இதனையடுத்து அமைச்சர் **பூனை எப்போது கடிக்கிறது? என்ற ஒரு வினாவை எழுப்பினார். இதற்கு செயலாளர் செல்வவடிவேல் வீட்டில் வளர்க்கும் பூனைகள் குழந்தைகளுக்கு கடிக்கின்றன, விறாண்டுகின்றன. மேலும் இச்செயல்கள் இரவில்தான் நடக்கின்றன எனக் கூறிய போது மீண்டும் கூட்டத்தில்** சிரிப்பு ஆரவாரம் ஏற்பட்டது.

இத்தோடு நிறுத்திவிடாது மீண்டும் அமைச்சர் "வளர்ப்பவர்களுக்கே பூனை கடிக்கிறதா" என ஆச்சரியத்துடன் வினவ அதற்கும் பதிலளித்த செயலாளர் "ஓம் வளர்ப்பவர்களுக்கும் தான் கடிக்கின்றது" என்றார்.

இதன்பின்னர் சிறிது நேரம் கூட்டத்தில் அமைதி நிலவியது. மீண்டும் அமைச்சர் இந்தக் கூட்டத்திற்கு பிரதேச சபைகளின் செயலாளர்கள் வருகை தந்துள்ளனரா? எனக் கேள்வி எழுப்ப கூட்டத்தின் கடைசி ஆசன வரிசையில் அமர்ந்திருந்த ஒருவர், "அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை" என்று கூற அறிவிக்கவில்லையா? ஏன் அறிவிக்கவில்லை? என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடமும் பொலிஸாரிடமும் அமைச்சர் கேள்வி எழுப்பிய போது, அவர்கள் ஏதோ சொல்ல, "சரி அடுத்த கூட்டத்திற்கு எல்லோருக்கும் தவறாமல் அறிவியுங்கள்" எனத் தெரிவித்ததோடு, "யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் எவரையும் காணவில்லையே" என மீண்டும் வினவ யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எழுந்து நின்றார்.

இதன்போது அமைச்சர் "நாய், பூனைக்கடிக்கு உள்ளாகுபவர்கள் அதிக பணம் செலவு செய்கின்றார்களாமே, ஏன் வைத்தியசாலையில் பணம் அறவிடப்படுகின்றதா? என அவரிடம் கேள்வி எழுப்ப, அவர் நாலாபக்கமும் திரும்பி பார்க்க உடனடியாக எழுந்த செயலாளர் செல்வவடிவேல், நான் அப்படிக் கூறவில்லை. கட்டாக்காலி நாய்க்கடிக்கு இலக்காகுபவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஊசிகள் போடவேண்டும். அதில் ஒரு ஊசிக்கு மட்டும் 6 ஆயிரம் ரூபா செலவாகின்றது. மொத்தமாக ஒருவரின் மருத்துவ செலவு மட்டும் 30 ஆயிரம் ரூபா எனக் கூறியதோடு, நாள் ஒன்றுக்கு 15 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இது தொடர்பில் கூடிய கவனம் எடுக்கப்படவேண்டும்.

தேவையில்லாத பணவிரயத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்ததோடு, யாழ்.நகரப்பகுதியில் தற்போது ஓரளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் குறைவடைந்துள்ளன யாழ். போதனா வைத்தியசாலைக்குள்ளும் நாய்களின் தொல்லை இல்லை எனவும் கூறினார்.

இதனையடுத்து, யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் கட்டாக்காலி நாய்களினால் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் தவிர்க்க கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் விடயம் பற்றி அமைச்சரவையில் தாம் பேசுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இவ்வாறு நேற்றைய கூட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் விவகாரம் சுவாரஸ்யமாகவும் முக்கியவிடய மாகவும் ஆராயப்பட்டது. (அ-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் புங்குடுதீவு

# ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலய

## மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

**28.06.2013**



### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



புங்குடுதீவு மடத்துவெளி கிராமத்தில் வயலூர் சேவித்திரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துவரும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். பக்தி, காலம், நேரம் தவறாது பூசைகள் நடைபெற்று ஆலயம் நாட்டின் சூழ்நிலையால் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. முருகன் அடியவர்கள் வந்து வழிபட்டு அருள் பெற்றுய்யுமாறு ஆசி கூறி கும்பாபிஷேகம் இனிதே நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

*சிவஸ்ரீ.ஸ்ரீநிவாச அருணோதய சிவாச்சாரியார், ஆலய பிரதமகுரு, ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி, புங்குடுதீவு.*

### ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது



வயலூர் முருகன் என வழங்கும் ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமியின் அருளால் எமது ஆலயம் புதுப் பொலிவு பெற்று மூன்றுதள இராஜ கோபுரம் அமைக் கப்பட்டு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறு கிறது. என்னைக் கனடாவிலிருந்து அழைத்து தன்னை அழகான ஆலயத்தில் குடியமர்த்துவதற்கு வயலூர் முருகன் ஆசி வழங்கியதன் பிர காரம் எனது தலைமையிலான பரி பாலனசபையினரின் பூரண ஒத்து ழைப்புடனும் வெளிநாட்டு வாழ் எமது கிராம மக்களினதும் உள்ளூர் மக்க ளினதும் நிதிப்பங்களிப்புடன் இன்று ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதற்காக எனக்கு ஆசி வழங்கிய ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமியை வணங்கித் தொழுவதுடன் திட்டமிடப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளை எண்ணியபடி நிறைவு செய்வதற்கு அவனின் ஆசியை வேண்டி நிற்கின் றேன். எம்பெருமானின் மஹா கும்பாபிஷேக தினத்தில் கலந்துகொண்டு அவனின் அருளாசியை பெற்றுக்கொள்ளுமாறு உங்கள் அனை வரையும் வேண்டி நிற்கிறேன்.

*அருணாசலம் சண்முகநாதன், தலைவர், ஆலய பரிபாலனசபை, ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி, புங்குடுதீவு*

### மூத்தள இராஜகோபுர கும்பாபிஷேகம் இன்று



புங்குடுதீவு மடத்துவெளி பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய இராஜகோபுர சகித புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகனின் திருவ ருளை வேண்டி, ஆலய திருப்பணி வேலைக ளில் தங் களை முற்றுமுழுதாக ஈடுபடுத்திய திருப்பணிச் சபை யினரை வாழ்த்தி, முயற்சி திருவினையாக்கும் என்ற வாக்கின்படி இவ்வூர் மக்களாலும் புலம்பெயர்ந்து வாழும் வயலூர் முரு கனின் அடியார் களின் நிதியுதவியுடனும் அமைக்கப்பட்டுள்ள முத்தள இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகப்பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

*சேனாதிராசா சுந்தரலிங்கம், பொதுப்பிரதிநிதி,ஆலய பரிபாலனசபை, ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி, புங்குடுதீவு.*

### எம்பெருமானின் ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்



எமது முருகன் ஆலயம் கடந்த பல வருடங்களாக எந்தவித புனரமைப்புப் பணிகளும் செய்யப்படாது காணப்பட்டபோது அமரர் இராமநாதன் அவர்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின. எனினும் அவரின் திடீர் மறைவினால் ஆலய புனரமைப்பு வேலைகளை நிறுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. எனினும் அவரது மருமகன் சே. சுந்தர லிங்கம் அவர்களினால் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிலையில் கனடாவிலிருந்து வருகைதந்த ஆ.சண்முகநாதன் அவர்கள் புனரமைப்புப் பணி முழுவதையும் பொறுப்பேற்று திறம்பட மேற்கொண்டு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இதற்காக அனைத்து வழிகளிலும் உதவிய முருகன் அடியார்கள் அனைவருக்கும் எம்பெருமானின் ஆசி கிடைக்கவேண்டுமென பிரார்த்தித்து ஆலய கும்பாபிஷேக நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

*கடாட்சம் சதீபன் (ஜே.பி),ஆலய பரிபாலன சபை, ஸ்ரீபாலசுப்பிரமணியசுவாமி கோவில், மடத்துவெளி, புங்குடுதீவு.*

### நீண்ட காலக் கனவு நனவாகிறது



எங்கள் குலதெய்வம் அருள்மிகு வயலூர் முருக னின் இராஜகோபுர கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மடத்து வெளி வாழ் மக்களின் நீண்டகாலக் கனவு இன்று நன வாகிறது. ஆலய பரிபாலன சபையினரும் இவ்வூர் மக்க ளும் இணைந்து அழகிய மணிமண்டபத்துடனான மூன்று தளங்களைக்கொண்ட இராஜ கோபுரத்தை நிர்மாணம் செய்து இன்றைய நன்னாளில் இவ்விழாவினை நடத்துகின்றனர். முருகனின் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று அடியார்கள் அனைவரும் வயலூர் முருகனின் அருளைப் பெற அவர் பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**

*நல்லையா தர்மபாலன் (முன்னாள் அதிபர்,புங்குடுதீவு மகா வித்தியாலயம்) திருப்பணிச்சபை, கனடா.*

### கும்பாபிஷேகக் குருமாரின் ஆசிச் செய்தி





வலலீ காந்தஸ் ஸ்மரணம்
எம் ஜெயஜய சுப்ரமண்யோம்

அருள்மிகு மடத்துவெளி பாலசுப்பிரம ணியர் திருக்கோவில் திருமஞ்சன குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா நிகழும் மங்களகர மான விஜய வருடம் ஆனி மாதம் 14ஆம் நாள் (28.06.2013) வெள் ளிக்கிழமை காலை 9.20 மணிமுதல் 10.25 மணிவரையும் வரும் சிங்கலக்ன சுப முகூர்த்தவேளையில் பாலசுப்பிரம ணிய சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுகின்றமை நம் எல்லோருடைய பூர்வ புண்ணிய பல னினாலேயாகும். அவன் அருளால் அவன்தாள் வணங்கி இக் கும்பாபி ஷேகத்தை சிறப்புற நடத்தும் ஆலய பரிபாலனச் குடும்பத்தருக்கும் நிர்வாக சபையினர், திருப்பணிச் செய்தோர், பெருஞ்சாந்தியில் பங்குகொண்ட அனைவருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்ப தோடு அமரர் வீ.ஆர். இராம நாதப் பெருந்தகையாருடைய பெருவிருப் போடு நிர்வாகத்திறனும் முருக னிடத்தே வைத்த பக்தியும் புங்குடுதீவு மக்களின் நன்மனத்தினால் முருகன் திருவருள் இக்கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவேற்ற துணை நிற்கின்றது.

வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் எல்லோரையும் வளமே வாழவாழ்த்துவதோடு இவ்வாலயம் புதுமை பொலிவும் நித்திய நைமித்திய பூசைகள், விழாக்கள் எல்லாம் காலம் தவறாது நிகழ்த்தவும் முருகன் திருவருளைப் பிரார்த்திப்பதுடன் வேண்டிய வரங்கள் பெற்றுய்யுமாறு வாழ்த்துகின்றோம்.

*கும்பாபிஷேக சர்வபோதகர், ப.முத்து குருக்கள் நயினை குருமணி*

*கும்பாபிஷேக பிரதமகுருமணி சிவஸ்ரீ.பாலகுமார சிவாச்சாரியார், நயினை.*

### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹா கும்பாபிஷே கம் இன்று நடைபெறுவது மக்களிடையே ஆன்மீக வளர்ச்சியை வளர்க்கும் ஒரு செயலாகும்.

ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்வது 12 வருடங்க ளுக்கு ஒரு முறை செய்யப்படும் அரிய ஒரு நிகழ்வாகும். இவ்வாலய பரிபாலன சபையினரும் இவ்வூர் மக்களும் இணைந்து ஆலயத் தைப் புனரமைப்புச் செய்து இன்றைய நன்னாளில் இப்பெருவிழாவை நடத்து கின்றனர். இவ்விதம் ஆலய கைங்கரியங்கள செய்வதால் மக்கள் நற் கீர்த்தியுடன் வாழ்வர். இவற்றை முன்னிட்டு நடத்தும் இவ்வாலய பரிபாலன சபையினர், இக்கிராமமக்கள், கிரியைகளை செவ்வனே நிறை வேற்றும் அந்தண சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் முருகன் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீனமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

### பிரதேச செயலரின் கும்பாபிஷேகச் செய்தி




அற்புதமாக ஆனந்தமயமாக எந்தமயமும் கந்தமய மாக காட்சியளிக்கின்ற புங்குடுதீவு - மடத்துவெளி பால சுப்பிரமணிய ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு அகமகிழ்கின் றேன். யாழ்ப்பாணத்தின் தென் பகுதியில் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் வள்ளி தெய்வானை சமேதர ராய் இருந்து அருளாட்சி புரிகின்ற கந்தப் பெருமாளுக்கு குடமுழுக்குக் காண்பது இக்கிராமத்துக் கிடைத்த சிறப்பாகும்.

இவ் ஆலயத்தின் முகப்பிலே அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரமா னது கம்பீரமாக, வானுயர்ந்து நிற்கின்ற அழகு எம்மை மெய்மறக்கச் செய்கின்றது. மேலும், இவ் ஆலயத்தின் மணிமண்டபம், பரிவாரக் கோயில கள் கலைநுட்பத்துடன் அமைக்கப்பட்டு சிறப்புற்று விளங்குகின்றன. குறைவில்லாத நிறை செல்வம் தரும் பாலசுப்பிரமணியனின் குடமுழுக் குத் திருநாள் சிறக்கவும் இந் நிகழ்வைக் காணும் அடியவர்கள் அனைவரும் எம் பெருமானின் திருவருள் பெற வாழ்த்தி ஆசிகளைக் கூறி நிற்கின்றேன்.

*திருமதி. மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலர், வேலணை.*

### அழகான தோற்றத்துடன் காட்சியளிக்கிறது



வயலூர் முருகன் என வழங்கும் புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு இன்று நடைபெறுகிறது. நீண்டகால மாக புனரமைக்கப்படாது காணப்பட்ட எமது ஆலயம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகை யில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கென அரும்பாடுபட்ட எமது தலைவர் அவர்களுக்கு வாழ்த்துக் களைக் கூறுவதுடன் நிதிப்பங்களிப்புக்களையும் ஏனைய உதவிகளையும் வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது ஆலயம் மேலும் பல புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு சிறப்புற உங்கள் உதவிகளை வேண்டுவதுடன் கும்பாபி ஷேக நிகழ்வில் கலந்துகொண்டு எம்பெருமானின் ஆசியைப்பெற்றுக் கொள்ளுமாறு உங் களை அழைக்கின்றேன்.

*நல்லதம்பி சசிதரன், பொருளாளர், ஆலய பரிபாலனசபை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம்; மடத்துவெளி, புங்குடுதீவு.*

## மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலய வரலாறு

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் ஆரம்ப காலத்தில் நாச்சிமார் கோவில் என்றே அழைக்கப்பட்டது. புங்குடுதீ வினுள் நுழைந்ததும் முதலில் வரும் கிராமம் மடத்துவெளி. இக்கிராமத் தினுள் நுழைந்ததும் பிரதான வீதியின் வலதுபுறம் நெடுகிலும் பச்சைப் பசேலென்ற நெல் வயல்களின் நடுவே கிழக்கு நோக்கி சிங்காரமாய் கோலோச்சும் முருகப்பெருமானின் அழகுமிகு திருத்தலம் காட்சியளிக் கும். கம்பீரமாய் எழுந்து நிற்கும் சிற்பத்தேர் முட்டியின் பின்னே தனங்கூடலின் பின்னணியில் அருள்புரியும் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் எழுந்தருளியிருக்கிறார். இளந்தாதி நாச்சிமார் கோவில் என்ற தொன் மைப் பெயரைக்கொண்ட இவ்வாலயம் சுமார் 400 ஆண்டுகள் பழைமைவாய்ந்ததாகும்.

400 ஆண்டுகளுக்கு முன்னே வள்ளி நாச்சியார் அயல்கிராமத்தில் இருந்து மடத்துவெளி கிராமத்தை சேர்ந்தவரைத் திருமணம் செய்தார். மணமகளான நாச்சியார் மணமகன் வீட்டில் 3 நாட்கள் தங்கி வழமைப் படி இருந்தார். 3ஆம் நாள் காலை நாச்சியார் முன்புறம் உள்ள வயலில் இறங்கியபோது வயலின் உரிமையாளர் நீ புகுந்தவீடு எம்மோடு சேர்ந்து வாழும் தகுதியற்றது என்று ஏளனம் செய்தார். இதனைக்கேட்டு கவலை யுற்ற நாச்சியார் அதேயிடத்திலேயே தனது தாலியைக் கழற்றி அந்த வயல் வரம்பில் ஒரு கல்லின்மீது வைத்து சிரட்டையால் மூடிவிட்டு தனது பிறந்த வீட்டிற்குச் சென்றுவிட்டார். இதனைக் கண்ட இவரது கணவர் அன்றுமுதல் அதேயிடத்தில் அந்தக் கல்லை வைத்து ஒரு கோவிலை உருவாக்கி வழிபட்டு தானும் மறுமணம் செய்து வாழ்ந்துவந்தார்.

வள்ளி நாச்சியார் தனது பிறந்த ஊருக்குச் சென்று அங்கே உள்ள இழுப்பண்ணை எனும் இடத்தில் ஒரு ஆலயத்தை வைத்து வழிபட்டார். அந்த ஆலயம் வல்லன் இழுப்பண்ணை நாச்சிமார் கோவில் என இப் போதும் அழைக்கப்படுகின்றது. மடத்துவெளி நாச்சிமார் கோவிலின் தெற்கில் ஒரு அரச மரம் நின்றது. அங்கே ஒரு பாம்பு வாழ்ந்து வந்ததாக வும் கூறப்படுகின்றது. இந்த அரச மரத்தின் வேரானது நீளமாக பக்கத் திலிருந்த சுண்ணாம்பினால் ஆன கோயில் சுவரில் பாம்பு வாழ்ந்த ஓட்டையினருகே ஒரு மனித கை கால் உருவில் வேர் படர்ந்திருந்த தாகவும் மக்கள் இந்த அதிசயத்தைப் பார்க்க மக்கள் கூடத் தொடங்கி யதும் அக்கிராமத்தைச் சேர்ந்த பூரணம் என்ற வயோதிப மாது இந்த வேரை முறித்துக்கொண்டு போய் தன் வீட்டுக்கூரை மேல் எறிந்துவிட அவ்வீடு அன்றிரவே எரிந்து சாம்பலானதாக வரலாறு கூறுகின்றது.

இவ்வாலயம் 1960ஆம் ஆண்டு காலத்தில் புனரமைக்கப்பட்டு அதன் உரிமையாளராக திரு.வேலுப்பிள்ளை சபாபதி இருந்து வந்தார். இக்காலத்தில் இவ்வாலயத்தில் இருந்த பொருட்கள் திருட்டுப்போய் விட்டன. இதனால் கோபங்கொண்ட சபாபதியார் எனக்கு திருடனைக் காட்டவேண்டும். அதுவரை நான் ஆலயத்தைத் திறக்கவும்மாட்டேன் விளக்கு வைக்கவும்மாட்டேன் என்று ஆலயத்தைப்பூட்டிச் சென்றுவிட் டார். அதிகாலையில் பார்த்தபோது திருட்டுப்போன பொருட்கள் அத் தனையும் ஆலய முன்றலில் வைக்கப்பட்டு கற்பூரம் கொளுத்தியி ருக்கக் காணப்பட்டது. அதன்பின்னர் ஆலயம் திறக்கப்பட்டு விளக்கு வைக்கப்பட்டது. இவரது வறுமை காரணமாக தொடர்ந்து இவ்வால யத்தை வர்த்தகர் வி.அருணாசலம் பொறுப்பேற்ற பின்னர் முற்று முழுதாக ஆலயம் புனரமைக்கப்பட்டது.

மூலஸ்தானத்தின் உள்ளே வேலாயுதமும் வடமேற்கு மூலையில் நாச்சியாரின் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயத்தின் பேரும் பாலசுப்பிரமணியர் கோவில் என்றும் மாற்றப்பட்டது. சின்ன நல்லூர் என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் நல்லூர் ஆலயம் போன்றே சரியான நேரத்தில் பூஜை நடைபெற்று வருகிறது. அத்தோடு இவ்வாலயத்தின் திருவிழாக்கள் மிகக் கட்டுப்பாட்டுடன் முறையான சைவவிதிமுறைக்கேற்ப நடைபெறுவது வழக்கம். திருவிழா தினமும் பகலும் இரவும் பன்னிரெண்டு மணிக்கே முற்றாக முடிவுறும். அத்தோடு சமயக் கொள்கைகளுக்கு உட்படாத சினிமாப் பாடல்களைக்கொண்ட நிகழ்ச்சிகள், கேளிக்கை, வேடிக்கை நிகழ்ச்சிகள் தடை செய்யப்பட்ட நிலையிலேயே திருவிழா நடைபெறும்.

திரு.வி.அருணாசலத்தைத் தொடர்ந்து திரு.இ.குலசேகரம்பிள்ளை ஆசிரியர், திரு.க.தியாகராசா ஆசிரியர், திரு.ப.பாலசுப்பிரமணியம், திரு.வே.சுப்பிரமணியம் தபாலதிபர் இவர்களைத் தொடர்ந்து வி.இராம நாதன் வர்த்தகர் பொறுப்பேற்றார். இவரது முயற்சியில் இவ்வாலயத்தின் எழுபதுகளில் ஆரம்பத்தில் புங்குடுதீவிலேயே முதன்முதலாக முற்றிலும் சித்திரவேலைப்பாட்டில் முடிவரை அமையப்பெற்ற நல்லூர் ஆலய தேரை ஒத்ததான சித்திரத்தேர் வீதியுலா வந்து பெருமை பெற்றது.

பிரபல வர்த்தகர் அ.மாணிக்கம் மனைவியின் நினைவாக ஒரு அன்னதான மண்டபத்தை அமைத்துக்கொடுத்துள்ளார். திருவிழாக் காலத்தில் இங்கு அன்னதானம் நடைபெறும். இந்தப்பணியை சிறப்பாக மடத்துவெளி சனசமூக நிலையத்தினர் தொடர்ந்து செய்துவந்தனர். 1987 முதல் இந்த அன்னதானப் பணியை அமுதக்கலசம் எனும் நாமமிட்டு தமது சொந்தப் பொறுப்பில் நடத்திச் சிறப்பித்தனர்.

வர்த்தகர் திரு.பா.பாலசுந்தரம் தாகசாந்தி நிலையத்தை திருவிழாக் காலங்களில் நடத்தி வருகிறார். இவ்வாலயத்தின் கொடியேற்றம், தேர்த்திருவிழா, தீர்த்தம், பூங்காவனம் உட்பட சிறப்பாக, வெகு விமரிசையாக நடைபெறும்.

மேலும் சூரன்போர், வாழைவெட்டு, கந்தசஷ்டி, திருவெம்பாவை போன்ற விழாக்களும் இங்கு சிறப்பானதாக இருக்கும். திருவெம்பாவை அதிகாலை 4 மணிக்கு ஆரம்ப மணி ஓசையுடன் தொடக்கி திருப்பள்ளி யெழுச்சிபாடி துயிலெழுப்புதல், மங்கள வாத்தியக் கச்சேரி, கூட்டு வழிபாடு என வரிசையாக நடைபெற்று காலை 6.30மணிக்கு முடிவுறு தல் வரலாற்றுப் பதிவாகும். இதேகாலத்தில் கூட்டுவழிபாட்டு மன்றத்தினர் அதிகாலையிலேயே சங்கு, சேமக்கலம் சகிதம் கிராமந்தோறும் பள்ளி யெழுப்பும் தொன்மைவாய்ந்த நிகழ்வை மேற்கொள்வர்.

இவ்வாலயத்தின் கூட்டு வழிபாட்டு மன்றம் தீவுப்பகுதியில் மிக சிறப்புப் பெற்றது. இந்தப் பணியைப் பொறுப்பாக நான்கு தசாப்தமாக நடத்தி வந்த பெருமை உள்ளூர் வர்த்தகரான கந்தையா அம்பலவாண ரையே சாரும். மிகவும் தரமான, சீரான கூட்டு வழிபாட்டு முறையை திறன்பட நடத்தி வந்தனர்.

1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவம் உட்புக பெரும்பா லான மக்கள் இடம்பெயர ஆலயம் பொலிவிழந்து போனது. பின்னர் திரு.சோ.சிவலிங்கம் தலைவராகவும் திரு.கு.கிருபானந்தன் செயலா ளராகவும் திருமதி.கி.சௌந்தரநாயகி பொருளாளராகவும் கொண்ட புதிய பரிபாலன சபையும் உருவாகியது. பின்வந்த காலங்களில் தம்பிப் பிள்ளை என்பவர் தானே தனித்து ஆலயத்தைத் துப்புரவு செய்து தின மும் விளக்கேற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

2002 முதல் மீண்டும் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற்று வருகின்றன. அண்மைக்காலமாக இந்த ஆலயத்தினை மீள் நிர் மாணம் செய்து இராஜகோபுரத்தினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டி ருக்கும் வேளையில் வி.இராமநாதன் அவர்கள் முருகனடி சேர்ந்தமை துரதிர்ஷ்டமானது. பொதுச் சேவையில் வரலாறுகளைப் பதிக்கும் மடத்துவெளி இளைஞர் மீண்டும் 2012 ஆம்ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற புதிய நிர்வாகத்தில் புதிய தலைவராக திரு.அ.சண்முக நாதனும் செயலாளர் செல்வன்.க.சதீபன், பொருளாளர் திரு.ந.சசிதரன் தெரிவு செய்யப்பட்டமை முருகன் ஆலயத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனலாம். உலகெங்கும் பரவிவாழும் மடத்துவெளி இளந்தலைமுறை யினரால் இனிவரும் காலங்களில் இவ்வாலயம் மேலும் சிறப்புப் பெறும் என நம்புவோமாக.

மகாமாரி சைவ உணவகமும் குளிர்பான விற்பனையகமும்
பிரதான வீதி, வங்களாவடிச் சந்தி,
வேலணை. 0774952093

புங்குடுதீவு தனியார் பேருந்து சேவையாளர் சங்கம்
பிரதானவீதி, 1ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

ராஜலக்சுமி கட்டட பொருள் விற்பனையகம்
132, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

அரிகரா சவுண்ட் சேவிஸ்
[illegible] வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு நடிகர் விருது வழங்கப்பட வேண்டுமாம்

## கருணாரட்ன கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியா, இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடுமென இடதுசாரிக் கட்சித் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணா ரட்ன தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பிலான கொள் கைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்ப டாவிட்டால் இந்திய தலையீட்டை தவிர்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகா ரங்களை பகிர்ந்தளிக்காது அரசாங்கம் தவ றிழைக்கின்றது. 13 ஆவது திருத்தச்சட்ட த்தை இந்தியா திணிக்கவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் 1957 ஆம் ஆண்டு முதலே இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதர வளிப்பதாக சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கப்பட வேண்டியது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உதாசீனம் செய்து வருகிறார். இதன் மூலம் ஜனாதிபதி தமது நடிப்புத் திறனை நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அண்மையில் இலங்கை நடிகர் ஜகத் சமில என்பவருக்கு நியூயோர்க் திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது வழங் கப்பட்டது. எதையும் புரிந்துகொள்ள முடியாத கதாபாத்திரமொன்றுக்கு உயிரூட்டியமைக்கா கவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த விருது உண்மையில் ஜனாதிபதி க்கே வழங்கப்பட்டிருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆஸி. ஆளும் தொழிற்கட்சியின் தலைவராக கெவின் ரூட் தெரிவு

அவுஸ்திரேலியாவின் ஆளும் தொழிற் கட்சியின் தலைவரைத் தேர்வு செய்யும் வாக் கெடுப்பில் பிரதமர் ஜூலியா கில்லார்டை தோற் கடித்து முன்னாள் பிரதமர் கெவின் ரூட் வெற்றிபெற்றுள்ளார்.

தலைவரைத் தேர்வு செய்வதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கெவின் ரூட்டினால் 57 வாக்குகளைப் பெற்றார். எனினும் பிரதமர் ஜூலியா கில்லார்ட்டினால் 45 வாக்குகளையே பெற முடிந்தது.

அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் செப் டெம்பர் 14 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடை பெறவுள்ள நிலையிலேயே தொழிலாளர் கட்சியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இருந்த போதும் எதிர்வரும் தேர்தலில் தொழிலாளர் கட்சி தோல்வியை சந்திக்கும் என கருத்துக் கணிப்புகள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் கட்சிக்குள் கெவின் ரூட் டின் ஆதரவு அதிகரித்துள்ளமையால் அவர் எதிர்வரும் தேர்தலில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தருவார் என கட்சி உறுப்பினர்கள் நம்புகின்றனர். (அ-2)

# பொன்சேகாவின் உரிமைகளை வழங்க ஜனாதிபதி ஆலோசனை

ஜனநாயக கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் உரிமைகளை மீண்டும் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்தி வருகி ன்றார் என அலரிமாளிகை வட்டாரத் தகவ ல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த வருடம் மே மாதம் 21 ஆம் திகதி சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலை செய் யப்பட்ட போது அவரது வாக்குரிமை மற்றும் அரசியல் ஈடுபாடு போன்றவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இவற்றை தற்போது ஜனாதிபதி அவருக்கு மீண்டும் வழங்கவுள்ளார் என அலரி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சரத் பொன்சேகாவுடன் இணை ந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டா ரநாயக்க குமாரதுங்க அரசியலில் மீண்டும் ஈடுபடவுள்ளார் என்ற தகவலும் வெளிவந் துள்ளது. இருப்பினும் இந்தத் தகவலை உறுதி செய்ய அவர் மறுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின் றது. (அ-2)

# பிரதியமைச்சர் இப்ராஹிம் கோத்தாவை சந்தித்தார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்ஆபிரிக்க சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான பிரதியமைச்சர் இப்ராஹிம் தலைமையிலான உயர்மட்ட தூதுக் குழுவினர் பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியு ள்ளனர்.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமை ச்சில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுந லவாய தலைவர்கள் மாநாட்டு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது தென் ஆபிரிக்காவின் தூதுக்குழுவுக்கு தலைமை வகித்த அந்நாட்டின் பிரதி அமைச்சர் இப்ராஹிமுக்கு பாதுகாப்புச் செயலாளர் ஞாபகச் சின்னம் ஒன்றை வழங்கினார். (அ-2)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1540

E-mail : valampuriijaffna@gmail.com

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம: பரணி கி.பா:41<br>உயரம்: 6'1" 5 இல் சூ,செவ்<br>தகைமை/தொழில்: BScUK Work Permit<br>தொ.இ:B599 | பிறப்பு: 1977 RC(V)<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>பட்டதாரி பயிலுனர்<br>தொ.இ:G827 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம: கேட்டை3<br>கி.பா :15.25<br>உயரம்: 5'7" 7இல் செவ்<br>தகைமை/தொழில்: MPhil UK PR<br>தொ.இ:B600 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா :7.75<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G829 |
| பிறப்பு: 1983 இந்து(.V)<br>நட்சத்திரம: அத்தம் 3<br>கி.பா: 14.75,12இல்<br>செவ்உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>சாரதிஅரச அலுவலகம்<br>தொ.இ:B602 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா : 27.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA<br>விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ:G830 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம: அத்தம் 3<br>கி.பா :14<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில: HNDA<br>காசாளர் தனியார்<br>தொ.இ:B606 | பிறப்பு: 1987 RC(V)<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc<br>போதனாசிரியர் (DEMO)<br>தொ.இ: G1979 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

மதன் எலக்ரோனிக்ஸ்

- சகல வகையான LCD, LED CRT TVகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் யாவும் சிறந்த முறையில் காலதாமதம் இன்றி திருத்திக் கொடுக்கப்படும்.
- LCD, LED CRT TV களுக்குரிய உதிரிப்பாகங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



சுதுமலைச் சந்தி

மானிப்பாய்.

தொ.பே: 0776479299

0770648448

0774685498

(சி-3766)

சமாதானப் பெருந்தொனி

"உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்..." (யோவான் 16:20)

கவலையா, கண்ணீரா,
தீராத வியாதியா,
பிசாசின் பிடியா,
வியாபாரத் தோல்விகளா,
பில்லி – சூனியக்கட்டுக்களா,
பாவங்களா,
பரம்பரை சாபங்களா,
அடிமைத்தனங்களா,
ஆகியவற்றிலிருந்து...

இயேசு விடுதலை கொடுக்கிறார்...

காலம் : ஆனி மாதம் 28,29,30ம் திகதிகளில்

நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு

இடம் : பிரதேச சபை மைதானம் ,

பரந்தன் வீதி ,புதுக்குடியிருப்பு.

(பெற்றோல் செற் முன்பாக)

இலங்கை நாசரேய சபை [illegible] சபை,

1ம் வட்டாரம், வேணாவில் ,புதுக்குடியிருப்பு.

இயேசு செய்த அற்புதங்களில் சில...

✻ குருதிப்புற்று நோயிலிருந்து விடுதலை (லூக்கோமியா)



எனக்கு மூன்று வருடங்களாக இருந்த குருதிப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டேன் ஜெப வேளையில் பரிபூரண விடுதலையை பெற்றுக்கொண்டேன்.

[ச.பரணிதரன் – புத்தூர்]

✻ மார்பக புற்று நோயிலிருந்து அற்புத விடுதலை



எனக்கு மார்பகத்தில் இருந்த புற்றுநோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் வைத்தியங்கள் பலனளிக்காத நிலையில் ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.

[இ.யசோதா – நெடுந்தீவு]

✻ மூளையில் இருந்த கட்டி மறைந்தது



எனது மூளையில் நரம்புச்சுருக்கத்தால் ஏற்பட்ட கட்டியினால் அடிக்கடி ஏற்படும் வலிப்பு நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.

[த.தனுஷன் – நாவற்குழி]

கடந்த மாதம் முல்லைத்தீவில் நடந்த சமாதானப் பெருந்தொனி சுவிசேஷக் கூட்டத்தில் அநேகர் பல அற்புத சுகத்தை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

✻

[குருடர்கள் பார்வையடைந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள், முடவர்கள் நடந்தார்கள். இது போன்ற பல அற்புதங்கள் நடைபெற்றன...]

(3127)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு பயந்தே இலங்கை மீதான தீர்மானத்தை பல நாடுகள் ஆதரித்தன

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)


**ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது தீர்மானத்தைக்கொண்டு வந்த அமெரிக்காவை எதிர்க்க பல நாடுகள் விரும்பாத காரணத்தினாலேயே அத்தீர்மானம் வெற்றி பெற்றதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது கனடாவே முதலில் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. ஆனால், அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளிடையே போதிய ஆதரவு கிடைக்காத காரணத்தால் கனடா தனது முயற்சியைக் கைவிட்டது. இந்நிலையில் நிலைமைகள் மாற்றமடைய இலங்கை மீதான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவர முடிவு செய்தது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க முடியாது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளால் பலம்வாய்ந்த நாடான அமெரிக்காவிடம் கூறமுடியாத நெருக்கடி ஏற்பட்டதை நாம் அறிவோம்.

இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்க முடியாது என அமெரிக்காவிடம் எப்படிக் கூற முடியும் என்று பல நாடுகள் எம்மிடம் தெரிவித்திருந்தன. அரசியல் தேவைகளுக்காக மனித உரிமை விவகாரங்களைப் பயன்படுத்திக் கொள்வது உலகில் அதிகரித்துள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமானதும் நடுநிலையானதுமான விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்த அழைப்புக் குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.



இச்சம்பவங்கள் குறித்து ஏற்கனவே நாம் இருக்கின்ற சாட்சிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நாம் விசாரணைகளை நடத்த முடியாது. ஆதாரங்கள் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றச் சட்டங்களின்படி விசாரணைகள் மேற்கொள்ளப்படும். தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த 25 ஆண்டுகளில் பெருமளவு நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட போதிலும் அச்சொத்துகள் அவர்களிடமே உள்ளன.

இறுதிக்கட்டப் போரின்போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் ஊடகங்கள் மூலம் திட்டமிட்ட வகையில் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை. இதனை திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அது அதிகாரபூர்வ மதிப்பீடாக கருதப்படுகின்றது. பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சிமாநாட்டின் மூலம் போருக்குப் பின்னரான கடந்த மூன்று ஆண்டுகளில் அடையப்பட்ட முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இம்மாநாட்டை புறக்கணிக்கும் முடிவினால் கனடா மேலும் மேலும் தனிமைப்பட்டு வருகிறது என்று இச்செவ்வியில் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஆஸி செல்ல முற்பட்ட 26 பேர் கைதாகினர்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 26 பேரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.


இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. களுவாஞ்சிக்குடி கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்வத ற்கு முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர் வவுனியா பிரதேசத்தையும் ஆறு பேர் இங்கிரிய பிரதேசத்தையும் மூன்று பேர் மீகம பிரதேசத்தையும் ஏனையோர் களுவாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங் களையும் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இராணுவத்தினரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


# நன்றி எனும் எமது இதயத் துடிப்புக்கள்



கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா



திரு.அ.ஜெயராஜ் (கிருபன்)
EPDP அமைப்பாளர்,
முல்லை மாவட்டம்.

சமுர்த்தி என்றால் மக்கள் மனங்களில் வலம் வரும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் எம்மை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்த எமது அன்பு அண்ணன் 'கிருபன்' அவர்களையும் எம் மனங்களின் நன்றித் துடிப்புடன் பாராட்டி வாழ்த்தி **நன்றி** தெரிவிக்கின்றோம்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், மு/புதுக்குடியிருப்பு

கு.நகுலன், யோ.மரீனா, யூ.சர்மிளா, ச.நிசாந்தன்,
பா.கார்த்திகா, கு.றாஜினி, பி.கௌசல்யா

(கி-3786)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்த சட்டமூலத்தை ஆதரிக்கும் அமைச்சர்களின் கருத்து யதார்த்தபூர்வமானது

## சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**13ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தெரிவித்துள்ள கருத்து யதார்த்தமானதாகும். அரசாங்கத்திற்குள் இருக்கும் அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை தவிர ஏனையவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கட்டியெழுப்பி நிரந்தரமானதும், நீதியானதுமான அரசியல் தீர்வினை வழங்குவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்பியுமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கோ, அல்லது அதனை ஒழிப்பதற்கோ ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும், இத்தகைய முயற்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெறமுடியாது என்று அமைச்சர்களான டியூ.குணசேகர, திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரட்ண, சந்திரசிறி கஜதீர, ரெஜினோல் குரே ஆகியோர் கருத்து தெரிவித்துள்ளனர். இது குறித்து கேட்டபோதே சம்பந்தன் எம்.பி.மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

குறித்த அமைச்சர்கள் யதார்த்தத்தைத் தெளிவுபடுத்தியுள்ளனர். பொதுவாகவே ஆளும் கட்சிக்குள் பெரும்பான்மையானோர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது ஒழிக்கும் முயற்சி தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாடையே கொண்டுள்ளனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகிய இருவருமே 13 ஆவது திருத்தத்தை இல்லாது ஒழிக்க வேண்டுமென கோருகின்றனர். அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் இடைக்கிடையில் இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள மூத்த அமைச்சர்களோ, ஏனையவர்களோ இவ்வாறான கருத்துக்களைப் பகிரங்கமாக தெரிவிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஆளும் தரப்பிற்கு சென்றவர்களோ, இடதுசாரி கட்சிகளின் தலைவர்களோ, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினரோ அல்லது சிறுபான்மை கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களோ 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக கருத்துக்களை தெரிவிக்கவில்லை.



அரசாங்கத்திற்குள் இரண்டு, மூன்று அமைச்சர்களே 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக பேசி வருகின்றனர். வேறு சில அமைப்புக்களும் அதற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றன. ஆளும் கட்சியில் இத்தகைய நிலை காணப்படுகின்றது என்பதற்காக நாம் அக்கறையற்றது இருந்துவிடமுடியாது. 13 இற்கு எதிரானகோஷங்களும் செயற்பாடுகளும் எந்தவிதமாக முடிவடையும் என்பது தொடர்பில் கூறமுடியாது. ஆனால், அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கட்டியெழுப்பி நிரந்தரமானதும் நீதியானதுமான அரசியல் தீர்வினை ஏற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும் எனவும் குறிப்பிட்டார் (அ)

## "அவளின் கதைகள்" கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

விழுது ஆற்றல் மேம்பாட்டுமையம் மற்றும் இணைத்துவ கற்கைக்கான சர்வதேச நிலையம் இணைந்து நடத்தும் **அவளின் கதைகள்** எனும் இலவச கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

யாழ்.பொது நூலக கூடத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இக் கண்காட்சி வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்து வரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள தாய்மார்களின் வாய்மூலக் கதையாடல்களின் காட்சியாக அமையவுள்ளது. (அ)

## பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து நேற்றுமுன்தினம் பேரணியாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஹைலெவல் வீதியின் ஊடாக நுகேகொட மேம்பாலத்தை வந்தடைந்தனர்.

நுகேகொட மேம்பாலத்தின் ஒரு பகுதியை மறித்து நின்ற மாணவர்கள் பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழும்பியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ-2)

## சீரடிசாயி மந்திர் மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை யாழ். நல்லூர் சீரடிசாயி மந்திர் மணவாளக்கோல விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 108 சங்குகளால் சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கான அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று இரவு 7 மணிக்கு ஆலயத்திலிருந்து சுவாமி வீதி உலா ஆரம்பமாகி மருதடி வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதியூடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

அதன்பின் செஜ் ஆரத்தி (நித்திரை பூஜை) நடைபெறவுள்ளது. (அ)





கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்றது. இவ்விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# தெரிவுக்குழுவில் எல்லா கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்க முடியாது- அமைச்சர் நிமால்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசாங்கத் தரப்பில் உள்ள சகல கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்க முடியாது என்று அமைச்சரும் அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். சபாநாயகரினால் நியமிக்கப்பட்டுள்ள 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவில் 19 பேர் அரச தரப்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடம்பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவற்றுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் 31 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரச தரப்பில் 19 பேர் மட்டுமே இடம் பெறமுடியும்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் விருப்பப்படியே அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அரசாங்கத்தில் பெரும் எண்ணிக்கையான கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அவை எல்லாம் தெரிவுக்குழுவில் நியமிக்கப்படவில்லை. அது நடைமுறைச் சாத்தியமில்லை.

ஆனால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுக்கும் தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் செய்யவும் யோசனைகளை சமர்ப்பிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்தப்படும். அதில் தெரிவுக் குழுவின் நிகழ்ச்சி அட்டவணை தயாரிக்கப்படும்.

ஐ.தே.க.,ஜே.வி.பி., தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பன இன்னமும் தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கவில்லை. அவர்கள் தமது பிரதிநிதிகளை நியமிக்காது போனாலும் குறிப்பிட்ட நாளில் தெரிவுக்குழு செயற்படத் தொடங்கும்.

கண்டிப்பாக மேற்குறித்த திகதிக்கு பின்னர், தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவிதுள்ளார். (அ-2)

### சட்டவிரோதமாக சுவீடனில்

# தங்கியுள்ள இலங்கையர்கள் நாடுகடத்தப்படுவர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் சுவீடனில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இலங்கையின் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுவீடன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் சுவீடனில் தங்கியிருக்கும் அகதி கோரிக் கையாளர்களே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளனர். விசேட விமானமொன்றின் மூலம் இவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

சுவீடனில் தங்கியுள்ள இலங்கை அகதி கோரிக்கையாளர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் சுவீடன் அரசாங்கம் இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை அகதி கோரிக்கையாளர்கள் சுவீடனில் தஞ்சமடைந்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



## ஆன்மீகம் 45

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

எதிர்காலத்தில் மீண்டும் கருணாநிதி ஆட்சி வரும். அந்த அம்மாவும் நாட்டை ஆளும். கருணாநிதி சாதாரண மனிதர் அல்ல. அவர் பெரிய மகானின் பிறவி. ஆனால், ஏனோ நாத்திகம் பேசுகிறார். இல்லையேல் இவர் தமிழ்நாட்டுக்கு தலைமையாய் இருக்க வேண்டியவர். அவர் மேல் குற்றமில்லை. அவர் பிறவி எடுத்த காரணத்தின் வழியில் அவர் செல்லுகிறார். அவ்வளவுதான். மறுபடியும் ஒரு காலகட்டத்தில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரும்.

ஆனால், இப்போது இருக்கும் தலைவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். இளைஞர் ஆட்சிதான் நடக்கும் என்றார்.

இவைகளை கேட்ட உடனே நம்ப முடியவில்லை! ஆயினும் கடந்த காலத்தில் அவர் சொல்லியவைகளை நான் நம்பாமலிருந்து அவை அவர் சொன்னவாறு நடைபெற்ற போது உடல் சிலிர்த்து இருக்கிறேன். இவரைப்போய் நம்பாமல் பாமரனாய் இருந்துவிட்டோமோ என்று வருந்தினேன். நானும் அப்போது சராசரி மனிதன்தானே, குழவி, புழுவை கொட்டிக் கொட்டி தன் உருவம் ஆக்குவதுபோல, அவர் மூலம் நான் பெற்ற தெளிவு என்னை அவர் அடிமை ஆக்கியது.

அவர் சொல்லியவாறு இந்திரா காந்தி முடிவும், ராஜிவ் காந்தியின் ஆட்சி துவக்கமும் நடந்தேறின! ஆனால், பாதகர்கள் சதிவலையில் வீழ்ந்து சிதறிப்போயிற்றே. அந்த அழகு உருவம், அந்த சோகம் சற்று குறைந்த நேரத்தில் ஒருநாள் என் நினைவில் இந்திராகாந்தி இறந்த போது சித்தர்பெருமான் கூறிய வார்த்தைகள் எதிரொலித்தன.

ஆமாம்! இரண்டாவது காந்தி என்று கூறிவிட்டே சென்றாரே. அதன் பொருள் சொல்லாமலே விளங்கியது. இதிலிருந்து அவர் வாக்கிலிருந்து வரம் எதையும் நான் உன்னிப்பாக கவனித்து அதுபற்றி பொருள் காண போராடுவதை வழக்கமாகக் கொண்டேன்.

சித்தர் பெருமானிடம் சேர்ந்தது முதல் எனக்காக எதையும் நான்

சித்தர் ஆச்சிரமத்தில் அன்னை சித்தர் தியாகிகளுடன் அன்னக்கொடி ஏற்றுதல்



அவரிடம் கேட்டதில்லை ஆனால் அதற்கான சூழ்நிலை என்னைச் சூழ்ந்தது. வேறு வழியின்றி தயக்கத்துடன் என் தந்தையாரை பற்றிக்கூறி, அவருக்கு கிடைக்க வேண்டிய பதவிமாற்றம் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகிறது. அதற்கு நீங்கள்தான் உதவவேண்டும் என்றேன்! அவர் சற்றுநேரம் கண்களை மூடியவர்- பிறகு புன்னகையுடன் என்னய்யா! இது என்ன பிரமாதமான விஷ்யமா! ஒருசொட்டு மை- அவ்வளவுதானே என்றார்!

எனக்குப் புரியவில்லை ஒரு கையெழுத்துப்போட எவ்வளவு மை செலவாகும். ஒரு சொட்டு மைதானே! என்று சிரித்தார். மேற்கொண்டு அவரிடம் விளக்கம் கேட்க எனக்கு துணிவில்லை. அவர் கருணை நமக்கு உண்டு. அவர் அருள் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்த போது என் தந்தையாரிடமிருந்து கடிதம் வந்தது. தனக்கு பதவி உயர்வுடன் திருச்சி நகருக்கு இட மாற்றமும் கிடைத்திருப்பதால் நான் தற்போது திருச்சியில்தான் இருக்கிறேன். உடன் வந்து சந்திக்கவும் என்று கடிதச் செய்தி கூறியது. சாமியிடம் விபரத்தைக் கூறி அவர் ஆசிபெற்று திருச்சி விரைந்தேன்.

அன்று திருச்சி நகரமே பரபரப்பாக இருந்தது. என் தந்தை நகரின் முக்கிய பகுதியில் டிராபிக்கை கட்டுப் படுத்தச் சென்று இருப்பதாக அறிந்து தந்தை இருந்த பகுதிக்கு விரைந்தேன்! அவர் அங்கு மிகவும் பரபரப்பாக பணியாற்றிக் கொண்டிருந்தார். பரபரப்புக்கு காரணம் எம்.ஜி.ஆரின் உடல் நிலை மோசமடைந்த செய்தியாகும். அந்த நிலையிலும் என் மனம் பெரம்பலூரரை நோக்கி பயணித்தது. அந்த திரிகாலஞானியின் பாதங்களை வணங்கிக் கொண்டிருந்தது.

ஒரு பிரபல ஆன்மீகவாதி ஒருவர் கொடி கட்டிப் பறந்த காலம்! அன்றைய தினப்பத்திரிகை ஒன்றில் அவர் பேசப் போவதாக நாள், இடம் குறிப்பிட்டு ஒரு விளம்பரத்தை கண்டேன்.

இவர் பற்றி சித்தர் அவர்களிடம் அபிப்பிராயம் கேட்க முடிவெடுத்து அவரை அணுகினேன். என் கேள்விக்கு விடையாக ஆன்மீகவாதியா? இதில் வாதமிட என்ன இருக்கிறது? இவர்கள் தங்கள் ஆன்மிக கொள்கைக்கு எதிராக இருக்கும் மாற்றுக் கருத்தினரிடம் வாதமிடுபவர்களா? அந்த காலத்தில் சங்கரர், மாத்வர், இராமனுஜர் போன்ற தத்துவவாதிகள் மாற்று கருத்துள்ள தத்துவவாதிகளிடம் கொடி ஏந்திச்சென்று வாதமிட்டு வென்று தம் தத்துவத்தை நிலை நாட்டுவது வரலாறு!

அதேபோல் இவர்கள் செயற்படுகிறார்கள். மக்களிடையே ஆத்ம ஞானத்தை விளக்குகிறார்கள் என்றேன்.

தொடரும்

# இலங்கையின் ஆதிக்குடிகள் நாகர், இயக்கர், வேடர்!

மகாவம்சம் கூறுவது:-

இலங்கையில் உள்ள நாகர் புத்தர்சிலை

மகாவம்சம் மற்றும் ஜாதகக் கதைகள் இலங்கையை தம்பபாணி எனக் குறிப்பிடுகிறது. இலங்கையில் உள்ள நாகதீபம், கல்யாணி என்ற இடங்களையும் அங்கே இயக்கர்களும் இயக்கிகளும் வாழ்ந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றன. மகாவம்சம் இயக்கர்கள் தெற்கிலும், நாகர்கள் வடக்கிலும் வட மேற்கிலும் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறது. இவர்கள் திராவிட இன மக்களாவர்.

இந்த நாகர்கள் கோதாவரி மற்றும் நர்மதா நதிகளுக்கு இடையில் மற்றும் அவந்தி மற்றும் மவுரியக் காலங்களில் மற்றும் அதற்குப் பின்பும் வாழ்ந்த நாகர்களுடன் தொடர்பு உள்ளவர்களாக இருக்கக் கூடிய சாத்தியம் உள்ளது. பழைய தமிழ் மரபுப்படி பல்லவ வம்சத்தின் பாரம்பரியம் பீலிவளை என்ற நாக இளவரசியை சோழன் கிள்ளிவளவன் திருமணம் செய்துகொண்டதன் மூலம் உருவானது எனச் சொல்லப்படுகிறது. தென்பகுதி துணைக் கண்டத்தில் அவர்களுடைய பெயருடன் தொடர்புள்ள நாகர்கோவில், நாகப்பட்டினம், நாக்பூர் போன்ற ஊர்கள் உள்ளன.

ஈழத்தில் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பல தொல்லியற் சான்றுகள் தமிழ் இனமக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன. பழைய கற்காலம்தொட்டு திராவிட இன மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். கி.மு. 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஈழம் எங்கும் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் சிறந்துவிளங்கிய மக்கள் குடியிருப்புகள் காணப்படுகின்றன. பயிர்ச்செய் நிலம், சிறுகுளம், இடுகாடு கொண்ட குடியிருப்புகள், இம்மக்களின் இரும்பு உபயோகம், இறந்தவர்களை அடக்கம் செய்யும்முறை, ஆழ்கடல் மீன்பிடி முறை, நீர்ப்பாசனமுறை, கறுப்பு மட்பாண்ட உபயோகம் என்பன காணப்படுகின்றன. ஆனைக்கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களில் எலும்புக் கூடுடன் கிடைத்துள்ள கோவேந்தன் கோவேந்தன் என்ற சொற்கள் பொறிக்கப்பட்ட வெண்கல முத்திரையும் வடமேற்கே பூநகரி தொடக்கம் களனி ஆற்றங்கரை வரையும் தென்கிழக்கே மட்டக்களப்பு தொடக்கம் அம்பாறை மாவட்டம் வரையும் காணப்படும் கறுப்பு- சிவப்பு மட்பாண்டங்கள் என்பனவும் கி.மு.10 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே ஈழத்தில் நாகரிகம் மிக்க தமிழ் இனம் வாழ்ந்ததைத் தெரிவிக்கின்றன.

பௌத்தம் இலங்கையில் பரவி ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரே பௌத்த நாகர்களுக்கும் பௌத்த தமிழர்களுக்கும் [illegible] கொடுக்கப்[illegible] இலங்கையில் இனப்பிரிவையும் மதப்பிரிவையும் உண்டாக்கியவர்கள் புத்த பிக்குகளே.



06

பின்னால் வந்த இஸ்லாம் மதம் இன்னோர் பகுதித் தமிழர்களைப் பிரித்தெடுத்துவிட்டது. தொடர்ந்து வந்த கிறிஸ்தவ மதம் மேலும் ஒருபகுதி தமிழ் மக்களை சிங்களவர்களாக இனம் மாற்றம் செய்துவிட்டது. மலைநாட்டுத் தமிழர்கள் அயல்கிராமங்களில் உள்ள சிங்களப்பெண்களை மணம் செய்து கொள்வதால் அவர்களும் சிறிது சிறிதாக தமிழர்கள் என்ற அடையாளத்தை இழந்து வருகிறார்கள். ஈழத்தில் தமிழர்கள் சிறுபான்மையாக மாறியதற்கு இந்த மதமாற்றமும் மொழி மாற்றமும் காரணிகளாகும்.

கி.பி. 140 அளவில் கிரேக்க புவியியல் அறிஞர் புகழ்பெற்ற உலகப் படத்தை வரைந்தார். இதில் இலங்கைத் தீவை தப்ரபேன் என்று [illegible] அவரது படத்தில் [illegible]ள்ள இடங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

தப்பிரபேன் என்பது தாமிரபரணி என்ற பெயரின் ஒரு உருமாற்றம். தீபவம்சத்தில் இந்தப் பெயர் தம்பபாணி என்றும் கிரேக்கர்கள் இதைத் தழுவி தப்ரபேன் என அழைக்கலானார்கள். விஜயன் இலங்கையில் வந்திறங்கிய இடத்தில் ஒரு நகரை உருவாக்கி அதற்கு தம்பபாணி என்று பெயர் இட்டதாக மகாவம்சம் கூறுகிறது.

நக்கீரன்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

498

## புத்திசாலித் திருடன்



சோமன், சாம்பன்,குட்டி ஆகிய மூவரும் கூட்டாகச் சேர்ந்து திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுள் பெரியவனான சோமன் அந்த அணிக்குத் தலைவனாகத் திகழ்ந்தான். சாம்பன் தலைவனிடம் விசுவாசம் உள்ள ஊழியன்! குட்டி அனைவரிலும் சிறியவன் ஆனாலும், மிகவும் புத்திசாலி. ஒரு முறை, அவர்கள் கொள்ளையடித்த பணம், நகைகளைக் காட்டினில் ஒரு பாழடைந்த கோயிலின் கருவறையில் கடவுள் விக்கிரகத்தின் பின்புறம் மறைத்து வைத்தனர். பிறகு, மூவரும் கோயில் மண்டபத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது தலைவன் சோமன், "நண்பர்களே!,இன்றுநாம் கொள்ளை அடித்ததை மூவரும் சமமாகச் பங்கிட்டுக் கொண்டால், ஒவ்வொருவரின் பங்கும் மிகக் குறைவாக இருக்கும். அதற்குப் பதிலாக, நம்மில் ஒருவரே எடுத்துக் கொண்டால்,

**அம்புலிமாமா கதைகள்**

அவன் திருட்டுத் தொழிலை விட்டு விட்டு நிம்மதியாக மற்றவர்களைப் போல் வாழ்க்கை நடத்தலாம். என்ன, சொல்கிறீர்கள்?" என்றான். சாம்பன் அதை உடனே ஒப்புக்கொள்ள,குட்டி, "நம்முள் யார் அதை எடுத்துக் கொள்வது என்று எப்படி தீர்மானிப்பது?" என்று கேட்டான்.

அதற்கு சோமன், இன்று இரவு உறங்கும் போது நம்மில் யார் திருடிய இப்பணத்தைக் கொண்டு லட்சாதிபதியாக மாறுவது போல் கனவு காண்கிறார்களோ, அவன் இதை எடுத்துக் கொள்வான் என்றான். மற்ற இருவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

சற்று நேரங்கழித்து மூவரும் கோயில் மண்டபத்தில் படுத்து உறங்க முயன்றனர். ஆனால் ஒருவருக்கும் தூக்கம் வரவில்லை. "வயிறு மந்தமாக இருக்கிறது. சிறிது நேரம் உலவிவிட்டு வருகிறேன்" என்று புறப்பட்ட குட்டி நேராகக் கோயிலின் பின்புறம் சென்றான். மற்றவர்களுக்குத் தெரியாமல் கோயிலுக்குள் புகுந்து, கருவறையில் ஒளித்து வைத்திருந்த திருட்டுப் பொருட்களை வெளியே எடுத்து வந்த ஒரு மரப்பொந்தில் மறைவாக வைத்தான். பிறகு உலவிவிட்டு வருபவனைப்போல், மீண்டும் மண்டபத்திற்கு வந்து படுத்துக் கொண்டான். மறுநாள் நல்ல கனவு ஒன்றைத் தான் கண்டதாகக் கூற, ஒவ்வொருவரும் ஒரு கற்பனைக் கதையினை மனதினுள் புனைந்து கொண்டு இருந்தனர். அன்று ஒருவருமே தூங்கவில்லை. மறுநாள் பொழுது புலர்ந்ததும், சோமன் தான் கண்ட கனவினைப் பற்றிக் கூறத் தொடங்கினான். "திருட்டுப் பொருட்களுடன் மகதராஜ்



யத்திற்குச் சென்றேன். அங்கு சத்திரத்தில் உறங்கும் போது, எனது திருட்டுப் பொருட்களை யாரோ திருடிவிட்டனர். உடனே மகத மன்னரிடம் சென்று புகார் செய்தேன். அதற்கு மன்னர், "ஐயா! நீ அயல் நாட்டவன் என்று நினைக்கிறேன்.


நாடு முழுதும் திருடர்கள் நிரம்பி இருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க என்னால் இயலவில்லை. அவர்களை சிறைப்பிடித்துத் தருபவனுக்கு என் மகளையும், பாதி ராஜ்யத்தையும் தருவதாக அறிவித்திருக்கிறேன். ஆயினும், இன்று வரை அப்படிப் பட்ட வீரதீரப் பராக்கிரமன் எனக்குக் கிடைக்கவில்லை," என்றார்.

அதைக்கேட்ட நான், "மகாராஜா! ஒரு வார்த்தை சொல்லுங்கள்! அனைத்துத் திருடர்களையும் ஒரு நொடியில் பிடித்து வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்ற நான் என் சவாலை நிறைவேற்றினேன். திருடர்கள் அனைவரையும் பிடித்து சிறையில் அடைத்து இளவரசியை மணந்து பாதி ராஜ்யத்தையும் அடைந்தேன்" என்றான்.


அதற்குப்பிறகு சாம்பன் தன் கனவைக்கூறினான். "நான் நாம் திருடிய பொருட்களை வைத்து கடல் கடந்து வியாபாரம் செய்ய எண்ணி கப்பல் ஏறினேன். ஆனால், திடீரென வீசிய புயலில் கப்பல்மூழ்க, நான் நாகத்தீவை அடைந்தேன். அங்கு இருந்த நாகக் கன்னியர்கள் இரத்தினங்கள் அணிந்து அழகாக இருந்தனர்.

ஆனால், நான் கொண்டு சென்ற நகைகளைத் தான் அவர்கள் பெரிதும் விரும்பினர். ஒவ்வொரு பெண்ணும் என்னிடம் நகைகள் தருமாறு கெஞ்சினர். நாகத்தீவின் இளவரசி நாக தேவியே என்னிடம் வந்து கெஞ்சினாள். அவளுக்குத் தராமல், அவளுடையத் தோழிகளுக்குத் தர ஆரம்பித்ததும். அவள் என்கையைப் பற்றி, "மிச்சமுள்ள நகைகளை எனக்குக் கொடு! பதிலுக்கு நீ எதைக் கேட்டாலும் நான் உனக்குத் தருவேன்!" என்று சொல்ல, நான், "நீ வேண்டும்! நீ என்னை மணம் புரிந்தால், இந்த நகைகள் அனைத்தும் உனக்கே சொந்தம்!" என்றேன். நாகதேவி சம்மதிக்க, நான் அவளை மணம் புரிந்து நாகத்தீவின் மன்னன் ஆனேன்!" என்றான்.

புத்திசாலியான குட்டி தன்கனவைக் கூறத் தொடங்கினான். நமது திருட்டுப் பொருட்களை வைத்து வியாபாரம் தொடங்கி, ஓர் லட்சாதிபதியாக மாறினேன். ஒரு பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். அவளோடு இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்ட இருந்த போது திடீரென்று என் கனவு கலைந்து விட்டது. விழித்துப் பார்த்த போது, நீங்கள் இருவரும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தீர்கள். அப்போது, கோயிலின் கருவறையில் இருந்து சில திருடர்கள் நாம் ஒளித்து வைத்து இருந்த பொருட்களை எடுத்துச் செல்வதைப் பார்த்தேன். அவர்களைத் தடுத்து நிறுத்த என் ஒருவனால் மட்டும் முடியாது என்பதால், உங்களை எழுப்ப முயற்சிசெய்தேன்.



முதலில் சோமனை எழுப்பினேன். "தலைவா! எழுந்திரு! நமது பொருட்களை திருடர்கள் எடுத்துச் செல்கின்றனர்" என்று கூறியபோது, சோமன்,



[illegible] நமது ராஜ்யத்தில் திருடர்கள் கிடையாது. நான் தான் அனைவரையும் பிடித்து சிறையில் அடைத்து விட்டேனே!" என்று உளறிக்கொண்டே திரும்பிப் படுத்துத் தூங்கிவிட்டான்.

உடனே சாம்பனை எழுப்பினேன். "அவன் தூக்கத்தில் "நாகதேவி! உன்னுடன் மகிழ்ச்சியாக நான் இருக்கும் சமயத்தில், எந்த முட்டாள் நம் இருவரையும் தொந்தரவு செய்கிறான்? நான் யாரையும் பார்க்க முடியாது! என்று சொல்லி விட்டு, நன்றாகத் தூங்க ஆரம்பிததான்.

இவ்வாறு, நீங்கள் இருவரும் பலமுறை எழுப்பியும் எழுந்திருக்காததால், என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்குள் திருடர்கள் நம் பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டனர்!" என்று முடித்தான்.

"அடப்பாவி" என்று கத்திய சோமன், "என்ன உளறுகிறாய்? நீ கண்டது கனவா இல்லை நனவா? நம் பொருட்களை யாரோ எடுத்துச் சென்றதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருந்தாய்?" என்று சீறினான். "தலைவா! இவனுக்குத் தூக்கக் கலக்கம் இன்னும் மறையவில்லை. அதனால், ஏதோ உளறுகிறான்! வா, நம் பொருட்களைச் சென்று பார்ப்போம்!" என்று கூற, இருவரும் கோயிலின் கருவறைக்குள் நுழைந்துப் பார்த்தனர். அவர்களுடைய திருட்டுப் பொருட்கள் காணவில்லை. இருவரும் ஆவேசத்துடன் திரும்பி ஓடி வந்து குட்டியைப் பிடித்து உலுக்கினர்.

"நான் சொல்வது உண்மைதான்! நீங்கள் இருவரும் கனவு உலகத்தில் இருந்தால் நான் பலமுறை உங்களை எழுப்பியும் நீங்கள் எழுந்திருக்கவில்லை" என்றான் குட்டி.

உடனே மற்ற இருவரும் ஒரே சமயத்தில், "வீணாகப் பொய் சொல்லாதே! நாங்கள் இருவ ரும் இரவு முழுவதும் உறங்கவேயில்லை. அப்போது கனவு எப்படி வரும்? நாங்கள் கூறியது பொய்!" என்று சொல்ல, ஆகா! அப்படியானால் நீங்கள் கனவே காணவில்லை. கனவு கண்டது நான் ஒருவன் தான்! அதனால், திருட்டுப் பொருட்கள் என் ஒருவனுக்கே சொர்தம்! ஒப்புக் கொள்கிறீர்களா? என்று அவர் கள் மடக்கினான் குட்டி. பிறகு, விரைந்து சென்று, தான் மறைத்து வைத்திருந்த பொருட்களை எடுத்து வந்தான்.

சோமனும், சாம்பனும் திகைத்து நின்றனர். தங்களை மிகவும் சாமர்த்தியமாகக் குட்டி போட்டியில் தோற்கடித்ததை எண்ணி வெட்கம் அடைந்தனர். பிறகு ஒருவாறு தங்களை சமாதானப் படுத்திக்கொண்டு இருவரும் குட்டியை வாழ்த்தி அனுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளித்தால் இந்தியாவின் ஒற்றுமைக்கே பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர்க்குற்றம் புரிந்த இராணுவ வீரர்களுக்கு எதிர் வரும் காலங்களில் பயிற்சி அளித்தால் அது இந்தியாவின் ஒற்றுமைக்கே ஆபத்தை ஏற்படுத்தும். இதனை மத்திய அரசு உணர்ந்து தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று வைகோ ஆக்ரோசமாக தெரிவித்துள்ளார்.

குன்னூர் வெலிங்டன் இராணுவப் பயிற்சி மையத்தில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதற்கு கண்டனம் தெரிவித்து நேற்றுமுன்தினம் ம.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இப்பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ கலந்து கொண்டு உரையாற்றும்போது இலங்கையில் போர்க்குற்றம் புரிந்த இராணுவ அதிகாரிகளுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிக்க கூடாது.

இனிமேலும் பயிற்சி அளித்தால் அது இந்தியாவின் ஒற்றுமைக்கே ஆபத்தாக முடியும்.

இதனை மத்திய அரசு உணர்ந்து தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றார். (அ-2)

# தெரிவுக்குழுவால் காலம் வீண்விரயமாக்கப்படும்

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழு காலத்தைவிரயமாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆளும் கட்சிக்குள் முரண்பட்ட நிலைப்பாடுகள் வெளிப்பட்டுள்ளன. இத் திருத்தச் சட்டம் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை வெளியிட அரசாங்கத்திற்கு முதுகெலும்பு கிடையாது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதாக அரசாங்கம் சர்வதேசத்திற்கு பல தடவைகள் வாக்குறுதி அளித்துள்ளது. போரின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என பலர் எதிர்பார்த்தனர். எனினும் போர் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தே செல்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிரி.பிரஜை கொலை குறித்து விசாரணை-அரசாங்கம்

(கொழும்பு)

பிரித்தானியதன்னார்வத் தொண்டர் குர்ஹம் சாக்கீ கொலை தொடர்பான விசாரணைகள் சரியான திசையிலேயே நகர்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது தங்காலை உணவக விடுதி ஒன்றில் வைத்து குர்ஹம் சாக்கீ, அவரது ரஷ்ய காதலி விக்டோரியோ ஆகியோர் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் குர்ஹம் சாக்கீ உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் காலதாமதமடைவதாக அவரது குடும்ப உறுப்பினர்களும் பிரித்தானிய அரசாங்கமும் அண்மையில் அதிருப்தி வெளியிட்டிருந்தது.

எனினும் பல்வேறு சாட்சியங்களிடமிருந்து தகவல்களைத்திரட்ட வேண்டியதனால் விசாரணைகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார். மேலும் ஏனைய வழக்கு விசாரணைகளை விடவும் இந்த வழக்கு விசாரணைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டின் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள் தள்ளுகிறது அரசு

## ஐ.தே.க குற்றச்சாட்டு

பொதுநலவாய மாநாட்டிற்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ள பிரிட்டனிடமிருந்து 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விமான என்ஜின்களையும் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விமான உதிரிப் பாகங்களையும் அரசாங்கம் கொள்வனவு செய்யவுள்ளது. இது குறித்த இதுவரையில் அரசாங்கம் பாராளுமன்றத்தில் பதில் கூறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ராஜகிரியவில் அண்மையில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் சர்வதேச நாடுகள் பல்வேறு அழுத்தங்களை பிரயோகிக்கின்ற நிலையில் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டது.

இந்நிலையில் அரசாங்கம் பிரித்தானியாவின் மனதைப் குளிர்ச்சிப்படுத்த அந்நாட்டிடமிருந்து விமான என்ஜின்களையும் ஏனைய உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யும் நடவடிக்கையினை மிகவும் இரகசியமாக முன்னெடுத்துள்ளது.

இதனால் நாட்டிற்கு ஏற்படப் போகும் பொருளாதார நெருக்கடிகளை யார் ஈடு செய்வார்கள். அரசின் பொருளாதார கொள்கை இந்த நிலையிலேயே காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (அ)




- ❖ 1389 - ஒட்டோமான் மற்றும் சேர்பியப் படைகள் கொசோவோவில் போரை ஆரம்பித்தன. இப்போர் ஒட்டோமான் இராணுவத்தினர் தென்கிழக்கு ஐரோப்பாவைக் கைப்பற்ற உதவியது.
- ❖ 1519 - ஐந்தாம் சார்ல்ஸ் புனித ரோமப் பேரரசின் மன்னனானான்.
- ❖ 1651 - 17ஆம் நூற்றண்டின் மிகப் பெரும் போர் போலந்துக்கும் உக்ரைனுக்கும் இடையில் ஆரம்பமானது.
- ❖ 1763 - ஹங்கேரியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- ❖ 1776 - ஜோர்ஜ் வோஷிங்டனை கடத்தத் திட்டமிட்டதற்காக அவரது மெய்ப்பாதுகாப்பாளராக இருந்த "தோமஸ் ஹின்க்கி" தூக்கிலிடப்பட்டான்.
- ❖ 1880 - அவுஸ்திரேலியாவின் காட்டுக் கொள்ளைக்காரன் நெட்கெலி கைது செய்யப்பட்டான்.
- ❖ 1881 - ஆஸ்திரியாவும் சேர்பியாவும் இரகசிய உடன்பாட்டை எட்டின.
- ❖ 1904 - "நோர்ஜ்" என்ற டென்மார்க் நாட்டுப் பயணிகள் கப்பல் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் சிறுதிட்டு ஒன்றுடன் மோதி மூழ்கியதில் 635 பேர் உயிரிழுந்தனர்.
- ❖ 1914 - ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸ் பேர்டினண்ட் மற்றும் அவனது மனைவி சோஃபி இருவரும் சேர்பியாவில் கொல்லப்பட்டனர். முதலாம் உலகப் போர் ஆரம்பிப்பதற்கு இதுவே காரணியாக அமைந்தது.
- ❖ 1919 - முதலாம் உலகப் போர்: பாரிசில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- ❖ 1922 - ஐரிய உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- ❖ 1940 - சோவியத் ஒன்றியம் பெசராபியாவை ருமேனியாவிடம் இருந்து கைப்பற்றியது.
- ❖ 1950 - வட கொரியா சியோலைக் கைப்பற்றியது.
- ❖ 1964 - மால்க்கம் எக்ஸ் ஆபிரிக்க அமெரிக்க ஒன்றியத்தை ஆரம்பித்தார்.
- ❖ 1967 - கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- ❖ 1994 - ஓம் ஷின்றிக்கியோ என்ற மதவழிபாட்டுக் குழுவினர் ஜப்பானில் மட்சுமோட்டோ என்ற இடத்தில் நச்சு வாயுவைப் பரவச் செய்ததில் 7 பேர் கொல்லப்பட்டு 660 பேர் காயமடைந்தனர்.
- ❖ 2004 - ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய அமெரிக்கா ஈராக்கியர்களிடம் ஒப்படைத்தது.

### பிறப்புகள்

- ❖ 1703 - ஜோன் வெஸ்லி, மெதடிசத்தை அறிமுகப்படுத்தியவர் (இ. 1791)
- ❖ **1907 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர் (இ. 1981)**
- ❖ 1921 - பி. வி. நரசிம்ம ராவ், இந்தியாவின் 9 ஆவது பிரதமர் (இ. 2004)
- ❖ 1937 - எஸ். எஸ். கணேசபிள்ளை, வானொலி, மேடை நடிகர் (இ. 1995)
- ❖ 1940 - முகமது யூனுஸ், வங்காள தேசத்தைச் சேர்ந்த பொருளியலாளர், நோபல் பரிசு பெற்றவர்.

### இறப்புகள்

- ❖ 1836 - ஜேம்ஸ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1751)
- ❖ 1914 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆஸ்திரிய இளவரசர்

### தாவீது அடிகள்



யாழ்.குடாநாட்டின் பருத்தித்துறையில் அமைந்துள்ள தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தாவீது அடிகள் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைக் கற்று லண்டன் பல்கலைக்கழக இளங்கலைமாணிப் பரீட்சை யில் சிறப்புத்தரத்தில் சித்தியடைந்தார்.

தொடர்ந்து புனித பேர்னாட் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து அங்கு குருத்துவக் கல்வியை முடித்த பின் 1931 டிசம்பர் 19 இல் கொழும்பு பேராயரினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு அப்போஸ்தலிக்க பணியாளனாக குருத்துவப் பணியை ஆரமபித்தார். தன் தந்தையார் கற்பித்த யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிலேயே 1936 தொடக்கம் 1967 ஆசிரியராகப் பணியாறறினார்.

### தமிழாய்வு

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் உந்துதலால் சமஸ்கிருத மொழியைக் கற்று புலமை அடைந்து அதில் முதுகலைமாணிப் பட்டத்தை லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கீழைத்தேச முக்கிய மொழிகளையும் மேலைத்தேச முக்கிய மொழிகளையும் கற்கத் தொடங்கினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ் மொழியை மையமாக வைத்து ஏனைய மொழிகளோடு ஒப்பீடு ஆய்வு செய்து, சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்து வைத்த ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளைப் பின்பற்றி தானும் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளை 1970 ஆம் ஆண்டு தொடக்கம் பல பாகங்களாக வெளியிட்டுள்ளார்.

ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் தன் வாழ்க்கையில் இறுதிக் காலத்தில் தான் கற்பித்த பத்திரிசியார் கல்லூரியின் மேல்மாடியில் ஓர் அறையில் தங்கி இருந்தார். யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற அடிகளார் உறக்கத்திற்குச் சென்றார். நித்திரைக்குச் சென்ற அவர் மறுநாள் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி அதிகாலை காலமானார். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்ட அதிர்ச்சியினாலேயே அடிகளார் உயிர் நீத்தார் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13-வது திருத்தத்தை, திருத்துவதில், குதியாய் குதித்தவர்கள் ஆட்டம், அடங்கியது ...!



## அடக்கி வாசிப்பது ஏன்?

மாகாணசபைத் தேர்தலும் 13-வது திருத்தச்சட்ட விவகாரமும், இப்போது அரசியலில் கடும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. ஒரு தரப்பு, மாகாணசபைக்கும் 13-வது திருத்தச் சட்டத்துக்கும் எதிராக, வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது. இன்னொரு தரப்பு, மாகாணசபைமுறை மற்றும் 13-வது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வருகிறது. மேலும் ஒரு தரப்பு, இரண்டுக்கும் நடுவே மதில் மேல் பூனையாக எதையும் சாராதது போன்று காட்டிக்கொண்டிருக்கிறது.

அரசாங்கத்துக்குள்ளே கூட இந்த விவகாரத்தில் பெரும் குழப்பமும் முரண்பாடுகளும் உள்ளன. உண்மையில், அரசாங்கத்தினது பேச்சிலும் கூடத் தடுமாற்றங்கள் இருப்பதை அவதானிக்கலாம். மாகாணசபை ஒரு வெள்ளையானை என்று சில நாட்களுக்கு முன்னர் டுவிட்டர் பேட்டி ஒன்றில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க குறிப்பிட்டிருந்தார். எதற்கும் பயனற்றது, பொதுமக்களின் வரிப்பணத்தை வீண்விரயம் செய்வது என்பதே அவரது கருத்து. அவர், தனிப்பட்ட ரீதியாக அதனைக் குறிப்பிடவில்லை. அதிகாரபூர்வமாக -ஜனாதிபதியின் செயலர் என்ற வகையில் தான், அவ்வாறு கூறியிருந்தார்.

சில நாட்களின் பின்னர், அலரி மாளிகையில் ஊடகங்களின் ஆசிரியர்கள், நிர்வாகிகளைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, மாகாணசபைகளை வெள்ளையானை என்று முத்திரை குத்தும் கருத்தை நிராகரித்தார். மாகாணசபைகள் முழுமையாகத் தோல்வியடைந்துவிடவில்லை என்றும், அதிலும் நன்மைகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மாகாணசபைகள் தொடர்பான அரசாங்கத்தின் அதிகாரபூர்வ நிலைப்பாடு, இதுவல்ல என்பதே உண்மை. மாகாணசபைகள், அவற்றுக்கான அதிகாரங்கள், 13வ்து திருத்தச்சட்டம் என்பவற்றை அரசாங்கத்தரப்பில் அதிகாரமுள்ள தலைவர்கள் ஒரு போதும் வரவேற்றுக் கருத்து வெளியிட்டதில்லை. அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் விதிவிலக்கல்ல.

இந்த நிலையில், மாகாணசபைகளினாலும் நன்மைகள் உள்ளன என்று கூறியிருப்பதும், அதுவும், மிக முக்கியமான தருணத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருப்பது, முக்கியமானது. அதாவது, 13-வது திருத்தச் சட்டத்தை ஒழிக்க அல்லது மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதியே அதற்குச் சார்பாகவும் கருத்து வெளியிட்டுள்ளார். இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

உண்மையில், போர் முடிவுக்கு வந்த பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தால் தனது தற்துணிவின் பேரில், மாகாணசபைகளை முழு அதிகாரங்களுடன் செயற்பட வைத்திருக்க முடியும். அதற்கான ஆணையும் அதிகாரங்களும் அவரிடம் உள்ளன.

ஆனால், அந்த அதிகாரங்களை பயன்படுத்தி மாகாணசபைகளின் அதிகாரங்களை வலுப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தயாராக இருக்கவில்லை. மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தி, அதனை வெறும், பயனற்றதொன்றாக மாற்றுவதே அவரது திட்டம்.

பல்வேறு சந்தர்ப்பங்களில், அவர் மாகாணசபை முறைமைக்குப் பதிலாக, கிராம சபைகளை உருவாக்கி அவற்றுக்கு அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்றும் அதுவே, உண்மையான அதிகாரப் பகிர்வு என்றும் கூறியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

அதாவது, மாகாணசபைகளைத் தொடர்ந்து, நடைமுறைப்படுத்துவது இந்த அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாக இல்லாத போதிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்குச் சார்பான சில கருத்துக்களை முன்வைத்துள்ளது ஆச்சரியமே.

13-வது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டே இதனை நோக்க வேண்டும். அரசியல் சட்டத் திருத்த விவகாரத்தில் எந்தவொரு நாட்டின் அழுத்தங்களுக்கும் அடிபணியப் போவதில்லை என்று அரசாங்கம் வெளிப்படையாகக் கூறிக்கொண்டாலும், உள்ளூர இந்தியா குறித்த அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கிறது.

ஏற்கனவே, இந்தியாவுடன் பல் வேறு விடயங்களில் முரண்பாடுகள் உருவாகியுள்ள நிலையில், 13-வது திருத்தச் சட்ட விவகாரத்தில் ஏற்படக் கூடிய நெருக்கடி, நிலைமைகளை மோசமாக்கிவிடும் என்பது அரசாங்கத் தரப்புக்குத் தெரியாமல் போயிருக்காது.

அதுவும், அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைத்து, இந்தியா பேசிய பின்னர், நிலைமையின் தீவிரத் தன்மையை அரசாங்கம் புரிந்து கொள்ளாமல் இருக்காது.

இது, தமிழர்களின் பிரச்சினை என்பதற்கு அப்பால், இந்தியாவினது கௌரவப் பிரச்சினையாகவும் கூட மாறி வருவதால், இலங்கை அரசாங்கம் சற்று நிதானமாகவே காய்களை நகர்த்தியாக வேண்டியுள்ளது.

இதனால், 13-வது திருத்தத்தைப் பலவீனப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு முன்னர், காட்டிய தீவிரத் தன்மையை இப்போது காட்டவில்லை என்பதை, அன்றாட நடப்புகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

மாகாணசபைகளுக்கும், 13-வது திருத்தச்சட்டத்திற்கும் ஆதரவான அமைச்சர்கள் பலர் அரசாங்கத்துக்குள்ளேயும் இருக்கின்றனர்.

அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தாவும் ஆறுமுகன் தொண்டைமானும் மதில் மேல் பூனைகளாக இருந்தாலும், ரவூப் ஹக்கீம், டியூ.குணசேகர, திஸ்ஸவிதாரண, வாசுதேவ நாணயக்கார, ராஜா கொல்லுரே, சந்திரசிறி கஜதீர, ராஜித சேனாரத்ன, றெஜினோல்ட் குரே போன்றவர்கள் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனா். இதுவும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்த இறுக்கம் சற்றுத் தளர்ந்துள்ளதற்கு ஒரு காரணம்.

ஆளும்கட்சியில், உள்ள பெரும்பாலானவர்கள், 13-வது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்துவதை விரும்பவில்லை என்றும் அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பே கூறுகின்ற நிலையில், நாடாளுமன்றத்தில் இதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்வது சிக்கலானது.

ஆனால், அதற்காக அரசாங்கம் 13-வது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் திட்டத்தை கைவிட்டுவிடும் என்று கருத முடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மாகாணசபைகளை வெள்ளையானை இல்லை என்று கூறினாலும். அவரது இலக்கு மாகாணசபைகள் அல்ல, கிராமசபைகள் தான். அந்த இலக்கை அடையும் வரை அரசாங்கம் ஓயப்போவதில்லை.

தற்போதைக்கு அரசாங்கம் தனது முயற்சியில் ஒரு சிறு பின்னடைவை சந்தித்துள்ளது, அவ்வளவுதான்.

அதாவது, வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக காணி, பொலிஸ் அதிகாரங்களை பிடுங்கிக் கொள்வது என்ற நிலைப்பாட்டில் இருந்து சற்று விலகி நிற்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது அரசாங்கம்.

இந்தியாவின் தரப்பில் இருந்து வரும் எதிர்ப்பு மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பற்றிய சந்தேகம் என்பவற்றை, இந்த தயக்கத்துக்கான காரணங்களாகக் குறிப்பிடலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம், இல்லாவிட்டாலும் அரசாங்கம் அதை முறியடிப்பதற்கான மாற்றுத் திட்டத்தையும் வைத்துள்ளது. ஆனாலும், அதைப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் இப்போது தயாராக இல்லை. ஏனெனில், வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சிமாநாட்டை நடத்திவிட வேண்டும் என்பதிலேயே அதன் கவனமெல்லாம் குவிந்திருக்கிறது.

கொமன்வெல்த் உச்சி மாநாட்டை நடத்துவதில் அதற்குப் பல சவால்கள் உள்ளதால், எப்படியேனும் அதை வெற்றிகரமாக நடத்தி முடித்தால் தான், அரசாங்கத்துக்கு நிம்மதி. இதில் சறுக்கல் ஏற்பட்டால், ச்ர்வதேச அளவில் இலங்கையின் பெயர் கெட்டுப்போய்விடும். எனவே, கொமன் வெல்த் மாநாட்டை எந்தப் பிரச்சினையுமின்றி நடத்தி முடிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளதாகத் தெரிகிறது.

13-வது திருத்தச்சட்டத்தில் கை வைத்தால், கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்கும் என்ற ஒரு தவலும் பரவியுள்ளது. அவ்வாறானதொரு நிலை ஏற்பாட்டால், அது அரசாங்கத்தை பெரும் பிரச்சினைக்குள் தள்ளிவிடும். எனவே, இந்தியாவின் விரோதத்தை இப்போதைக்குச் சம்பாதித்துக் கொள்வதை தவிர்ப்பதற்காக, 13-வது திருத்த விவகாரத்தை மெல்ல, மெல்ல நகர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவே தெரிகிறது.

கொமன் வெல்த் மாநாட்டின் பின்னர், இந்த அதிகாரக் குறைப்பு முயற்சிகள் தீவிரமடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காது போனாலும், அதனைச் சாதிப்பதற்கு, அரசாங்கத்தின் வசம் கருத்துக்கணிப்பு என்ற ஆயுதம் உள்ளது. ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரம் கருத்துக் கணிப்பை நடத்தும் தற்துணிவை அவருக்கு வழங்கியுள்ளது. அதை வைத்தே அவர், தான் நினைத்ததை இலகுவாக அடைந்துவிடுவார்.

அலரி மாளிகை ஊடகச் சந்திப்பில், மாகாணசபைகள் தொடர்பான மக்களின் கருத்தை அறிவது தொடர்பாக, அவர் வெளியிட்ட கருத்து, இதனை மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டும். கருத்துக்கணிப்பை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்ற வித்தை அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும்.

எனவே, தயக்கமின்றி அந்த முயற்சியில் அரசாங்கம் இறங்குதற்கு வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழுவில் பங்கேற்காதிருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம்

## நிலைப்பாட்டை விளக்கி நாளை அறிக்கை

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காதிருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பை அக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நாளை அறிக்கையூடாக வெளியிடவுள்ளார்.**

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பது குறித்து தீர்மானிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசேட சந்திப்பு பம்பலப்பிட்டியிலுள்ள கட்சித் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ள போதும் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நாளை சனிக்கிழமை கூடி இது தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் தலைவர் சம்பந்தன் அறிக்கை ஒன்றினூடாக கட்சியின் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ளார்.

இதன்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காமைக்கான காரணங்கள் குறித்து தெளிவாக அறிவிக்கப்படவுள்ளது.

அரசமைப்பில் குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு கடந்த 21 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. இதற்கமைய ஆளுந்தரப்பு சார்பில் 19 பிரதிநிதிகளின் பெயரை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பரிந்துரை செய்திருந்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கும் ஆளுந்தரப்புப் பிரதிநிதிகளின் பெயர்களைப் பரிந்துரை செய்வதற்கு முன்னரே தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சிகள் பங்கேற்கவேண்டும் என்றும் அவை பங்கேற்காவிட்டால் இருப்பவர்களைக் கொண்டு தெரிவுக்குழு நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுக்கப் போவதாகவும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை ஆதரிக்கும் ஆளுந்தரப்பு சிரேஷ்ட அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரட்ண ஆகியோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தம்மை புறக்கணித்ததன் மூலம் ஜனாதிபதி தம்மைப் பழிவாங்கி விட்டார் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமும் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து இவர்கள் பங்கேற்காத நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எப்படி தாம் நம்பிக்கை கொள்வது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேள்வி எழுப்பியிருந்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்கு அரசாங்கத்திடம் நிபந்தனைகளை முன்வைத்துள்ளதுடன் இந்நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் பங்கேற்பர் எனத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## புதிய வகை சிவப்பரிசி நாட்டில் அறிமுகம்

இரசாயன கலப்படமல்லாத புதிய வகையான ரோசகெக்குளு எனும் சிவப்பரிசி தற்போது அறிமுகமாகியுள்ளது. நாட்டு மக்களின் தேக நலனில் அதிக அக்கறை கொண்ட கூட்டுறவு மற்றும் உள்ளுர்வர்த்தகத்துறைஅமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் முயற்சியின் பயனாக இந்தப் புதிய வகை அரிசியைத் தற்போது சதொச மற்றும் லங்கா சதொச வலையமைப்புக்கூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

நீரிழிவு நோயாளர்கள் மற்றும் சுகயீனமுற்ற பலருக்கு சிவப்பு அரிசியையே உட்கொள்ளுமாறு வைத்தியர்கள் சிபாரிசு செய்கின்றனர். சந்தையில் சிவப்பு அரிசிக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் அதற்கு சமனாக இரசாயன கலப்படமற்ற தேகத்திற்கு சிறந்த ஆரோக்கியம் தரவல்ல புது வகையான சிவப்பரிசியை ரோச கெக்குளு எனும் பெயரில் கூட்டுறவு அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

இந்த அரிசியை கிலோ ஒன்று 48 ரூபா வீதம் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள முடியும். (அ-2)

## அலங்கார உற்சவம்


(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு - மயிலங்காடு ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இத் திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா, பக்த விஜயம் எனும் தலைப்பில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-2)

# இருப்பை தக்கவைத்துக் கொள்ள நாம் கல்வியில் முன்னேற வேண்டும்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அகற்றும் நடவடிக்கையை நான் எப்போதும் எதிர்க்கின்றேன் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டிருப்பு தேசிய பாடசாலையில் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று தமிழர்கள் தங்களது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் தங்கள்ள பலப்படுத்த வேண்டும். அதன் மூலமே நாம் பலம் பெற்ற சமூகமாகமாற முடியும்.

எம்மை இங்கிருந்து யாரும் அகற்ற முடியாது. குடியேற்றங்களை செய்ய முடியாது. பாடசாலைகளில் தொழில் நுட்பக்கல்வியை அறிமுகம் செய்யும் திட்டத்தின் கீழ் முஸ்லிம் பாடசாலைகள் மட்டுமே உள்ளீர்க்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கல்வியமைச்சரை சந்தித்து எனது ஆட்சேபனையை தெரிவித்தேன். நாம் முஸ்லிம் பாடசாலைகளை உள்ளீர்த்ததை எதிர்க்கவில்லை.

அதில் தமிழ் பாடசாலைகளை உள்ளீர்க்காமை தொடர்பிலேயே எனது ஆட்சேபனையை தெரிவித்தேன் என்றார். (அ-2)

# யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் பதிவு செய்யவேண்டும்

## கபே வலியுறுத்து


(கொழும்பு)


யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே கோரியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தங்களை வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்து கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தை அனைத்து இடம்பெயர் மக்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் இடம்பெயர் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யும் நோக்கில் புதிய சட்டமூலமொன்று அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டதாகவும் இதன்படி இடம்பெயர் மக்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)





உயிர்த்தெழும் வலிகள் எனும் ஜே.எஸ்.ராஜ் எழுதிய இரண்டாவது கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கவிதை தொகுப்பின் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் வெளியிட்டு வைப்பதையும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி கலாமணி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி அரசினர் வைத்தியசாலைக்கு

# நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை

(பூநகரி)

**பூநகரி அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் இப்பிரதேச நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



மேற்படி பிரதேசத்திற்கென நிரந்தர வைத்தியர் இரண்டு வருடங்களாக இன்மையால் நோயாளர்கள் பல துன்பங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர்.

ஆயினும் வைத்திசாலைக்கு தற்காலிகமாக வைத்தியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் பணிக்கு வரும் நாட்களில் மதியம் 12 மணிக்கு பின்னர் சேவையில் ஈடுபடுவதில்லை.

இதனால் 12 மணிக்குப் பின்னர் வருகின்ற நோயாளர்கள் பாதிக்கப் படுவதுடன் சனி, ஞாயிறு தினங்களில் வைத்தியர்கள் பணிக்கு வருகை தராமையால் அப் பிரதேச நோயாளர்கள் வேறு வைத்திய சாலைகளுக்கு பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பூநகரி அரசினர் வைத்தியசாலையில் ஒரு அம்புலன்ஸ் வண்டி மட்டுமே உள்ளது. வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களை வைத்தியர் இல்லாத நேரங்களில் வேறு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ஒரு அம்புலன்ஸ் வண்டியின் சேவையும் போதுமானதாக இல்லை.

இதனால் நோயாளர்கள் தமது பணத்தை செலவளித்தே கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட வைத்திய சாலைகளுக்கு செல்கின்றனர்.

இச்சந்தர்ப்பங்களில் நோயாளர்களுக்கு உயிராபத்துக்களும் ஏற்படலாம் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியுள்ள மக்கள் இப் பிரதேசத்திற்கு அரசினர் வைத்தியசாலையை அமைத்து தந்தால் மட்டும் போதுமா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, பூநகரி மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு சுகாதாரப் பகுதியினர் உடனடி நடவடிக்கை எடுத்து நிரந்தர வைத்தியரை நியமிக்க வேண்டுமென அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-84)

## தனிமையில் நின்ற சிறுவன் சி.உ. அதிகாரியிடம் ஒப்படைப்பு



வவுனியா பூங்கா வீதியில் தனிமையில் நின்ற சிறுவனை பிரதேச மக்கள் மீட்டு வவுனியா சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி எஸ். ஜெயக்கெனடி தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் மதியம் வவுனியா பூங்கா வீதியில் சுமார் நான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் தனிமையில் நடமாடுவதையும் வாகன நெரிசல்களுக்குள் அகப்பட்டதையும் கண்ட அப் பகுதி மக்கள் அச் சிறுவனை மீட்டு எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறுவனிடம் இருந்து எந்தவிதமான தகவல்களையும் பெறமுடியாதுள்ளது. எனவே, சிறுவன் மீட்கப்பட்டது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யவுள்ளதுடன் தற்காலிகமாக வவுனியா கோவிற்குளம் சிறுவர் இல்லத்தில் அச்சிறுவனை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.


மேலும், சிறுவனுடைய பெற்றோர் அல்லது உறவினர்கள் தொடர்பு கொண்டால் சிறுவனை ஒப்படைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-250-266)

## மின்சார தூண்கள் நடப்பட்டும் மின்சாரம் வழங்கப்படவில்லை

(சிவநகர்)

கிளிநொச்சி விவேகானந்தர் நகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏ-9 வீதிக்கு அண்மித்ததான குடியிருப்புகளுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் மின்சாரம் வழங்குவதற்கான தூண்கள் நடப்பட்டும் லக்ஸ்பானா மின்சார சேவை வழங்கும் நிலையம் அருகில் இருந்தும் இதுவரை பாவனையாளர்களுக்கான மின்சாரம் வழங்கப்படவில்லை.



எனவே, இம்மக்களின் நலனில் அக்கறை கொண்டு மின்சாரம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)

## ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வு

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடலும் சகபாடி ஆதரவு குழு கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலக முதன்நிலை மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தின் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளில் மாணவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் சம்பவ ஆய்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ள இந் நிகழ்வில் வளவாளர்களாக வவுனியா தெற்கு வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பளார் திருமதி நா. மாணிக்கவாசகமும் பண்டாரிகுளம் விபுலானந்தாக்கல்லூரி பிரதி அதிபர் அ. முரளிதரனும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-266)

## முல்லை.மக்களின் நலன்கருதி நீதிமன்றில் மூன்று பிரிவுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திற்கு வருகை தரும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மூன்று கட்டடத் தொகுதிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்துடன் இணைந்ததாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நீதிமன்ற கட்டடத்துடன் இணைந்ததாக கூடாரமொன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் நீதிபதி மா.கணேசராசாவின் முயற்சியினால் சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கும் குடும்ப நல ஆலோசனைப் பிரிவினருக்குமாக தனியாக கட்டடங்கள் நீதிமன்றத்தினுள்ளே ஒதுக்கப்பட்டுள்ளன. (ம-257)




## கல்விச் சுற்றுலா

ஓமந்தை பிள்ளைநேய பாடசாலை செயற்பாடுகள், சிறந்த கற்றல், கற்பித்தல், சூழல் மற்றும் அறிவூட்டல் செயற்பாடுகள் தொடர்பான கல்விச் சுற்றுலா ஒன்றினை வவுனியா தெற்கு வலய கல்வி உத்தியோகத்தர்களும் பாடசாலை அதிபர்களும் மேற்கொள்ளவுள்ளனர்.

வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தலைமையில் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் திருகோணமலை, சம்மாந்துறை ஆகிய வலய பாடசாலைகளுக்கு செல்லும் இவர்கள் அப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் மற்றும் அறிவூட்டல் செயற்பாடுகளை பார்வையிடவுள்ளனர்.

இக் கல்வி சுற்றுலாவில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக வலயக்கல்வி அலுவலகத்தில் தங்கள் வருகையை உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-266)

## கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு போட்டிகள்

(சிவநகர்)

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி கரைச்சி பிரதேச மட்டத்திலான 91 ஆவது கூட்டுறவுதின விழா எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான கரப்பந்தாட்டம், கயிறிழுத்தல், ஆகிய விளையாட்டுக்கள் நாளை சனிக்கிழமை கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்க பொது மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

அத்துடன் பலூன் உடைத்தல், கூட்டுறவு பணியாளர் விநாடி வினா போட்டி ஆகியன எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி கிளி.கூட்டுறவு சபை மண்டபத்தில் காலை 9மணிக்கு நடைபெறவுள்ளன.

அங்கத்தவர்கள் விழிப்புணர்வு விநாடி வினா, மரம் ஏறுதல், கிடுகு பின்னுதல், சிறந்த கிளை முகாமையாளர், சிறந்த பண்ணையாளர், சிறந்த வங்கி வாடிக்கையாளர், சிறந்த விவசாயி, சிறந்த பணியாளர் ஆகியவற்றுக்கான தெரிவுகளை சங்க மட்டத்தில் உரிய சங்கங்கள் தெரிவு செய்து விபரங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச ஏற்பாட்டுக் குழு செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-254)

## வவுனியாவில் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா

சு.வரதகுமாரின் மனவடுக்கள் (கவிதைத் தொகுப்பு), மனமே பேசு (குறு நாடகத் தொகுப்பு), சிந்தித்தால் துன்பமில்லை (சிறுவர் கதை), செ.சதீஷின் இரும்புக் கதவுக்குளிருந்து (கவிதைத் தொகுப்பு) ஆகிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரனும் கௌர விருந்தினர்களாக வவுனியா நகர கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, வவுனியா நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய அதிபர் சு.அமிர்தலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜோர்ஜ், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், இசை இளவரசன் கந்தப்பன் ஜெயந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வரவேற்புரையை ஏ.வி.ஆர் மூவிஸ் உறுப்பினர் இ.ரூபன் நிகழ்த்துவார். தலைமையுரையைத் தொடர்ந்து நூல்களின் வெளியீட்டு உரையை இளங்கவிஞர் திருமதி ச.சுகந்தினி நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து நூல்களின் மதிப்பீடு இடம்பெறும். மனவடுக்கள் நூலை விமர்சகர் சு.ஜெயச்சந்திரனும் மனமே பேசு நூலை நாடகாசிரியர் கந்தையா ஸ்ரீகந்தவேளும் சிந்தித்தால் துன்பமில்லை நூலை தமிழ் விரிவுரையாளர் ந.பார்த்தீபனும் இரும்புக்கதவுக்குளிருந்து நூலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி த.நிறைமதியும் நிகழ்த்துவர். விருந்தினர்கள் உரைகளைத் தொடர்ந்து ஏற்புரை, நன்றியுரையை நூலாசிரியர்கள் நிகழ்த்துவர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதேவன் துறையில் அத்துமீறி நுழையும் யாழ்.மீனவர்கள்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பூநகரி)

**பூநகரிப் பிரதேசத்தின் முக்கியமான மீன்பிடித் துறையான நாகதேவன் துறையின் பகுதியில் யாழ்.மாவட்ட மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால் பிரதேச மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.**


மேற்படி பிரதேச மக்களின் மீன்பிடியின் முக்கிய துறையாக நாகதேவன்துறை காணப்படுகின்றது. இத்துறையில் 200 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்.மாவட்ட மீனவர்கள் அத்துமீறி நாகதேவன் துறை கடற் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் பெரிய வலைகளையும் வள்ளங்களையும் பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவதால் இப்பகுதியிலுள்ள மீனவர்களின் தொழில் வளம் பாதிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச மீனவர்கள் சிறிய வள்ளங்களையும் தோணிகளையும் பாவித்தே தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது இக் கடற்பகுதியில் இறால் மிகுதியாக பிடிக்கப்பட்டு வருகின்றது. இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாழ்.மாவட்ட மீனவர்கள் பெருந்தொகையான இறால்களைப் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். இதனால் இக்கடலை மட்டுமே நம்பி தம் ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்லும் இப்பகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னர் தெரியப்படுத்தியதை அடுத்து சில காலம் யாழ். மாவட்ட மீனவர்கள் நாகதேவன் துறைக்கடல் பகுதிக்குள் நுழையாது இருந்தனர். ஆயினும் மீண்டும் யாழ்.மாவட்ட மீனவர்கள் மேற்படி கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைகின்றனர் என மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, பூநகரிப் பிரதேச மீனவர்களின் தொழில்களை சுரண்டாது இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் தீவிர மோதல் இடம் பெற்ற பகுதியாக நாகதேவன் துறை காணப்படுவதால் வீதிகள் மோசமாக சேதமடைந்துள்ளன.

குறிப்பாக மீனவர்கள் தொழிலை மேற்கொள்ள வழமையாக செல்கின்ற ஞானி மடத்திலிருந்து நாகதேவன்துறை வரையான வீதியையும் திருத்திக் கொடுப்பதுடன் யாழ்.மாவட்ட மீனவர்கள் அத்துமீறி இப்பிரதேச மக்களின் கடற் பகுதிக்குள் நுழையாமல் இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர்களாலும் சங்கத் தலைவராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-84)

## களக்கற்கை சுற்றுலா

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட விஞ்ஞான களக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட உயர்தர உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான களக்கற்கை சுற்றுலா நடைபெறவுள்ளதாக நிலைய முகாமையாளர் ஏ.ஜெய்க்கீஷன் அறிவித்துள்ளார்.

வடமாகாண விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஏ. சிவனருள்ராஜாவின் வழிகாட்டலில் நடைபெறும் இக்களகற்கை சுற்றுப் பயணத்தின் வளவாளர்களாக விஞ்ஞான பாட ஆசிரியர்களாக எஸ்.ரூபசிங்கம், பி.யோகானந்தம் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இக்களப்பயணம் இன்று வெள்ளிக்கிழமை இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் 35 மாணவிகளுடனும் புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் 12 மாணவர்களுடனும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரை சாகியத்தையும் அதை அண்டிய பிரதேசத்தையும் ஆய்வு செய்யவுள்ளனர் என களக்கற்கை நிலைய முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-266)

## பொறியியலாளர் ஓய்வுபெறுகிறார்



கட்டடங்கள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்று பொறியியலாளராக கடமையாற்றிய ஐ.சிவலோகநாதன் இன்று வெள்ளிக்கிழமை தனது பதவியில் இருந்து உத்தியோகபூர்வமாக ஓய்வுபெறவுள்ளார்.

வன்னிப்பகுதியில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலைமைகளின் பின்னர் குறித்த திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பொறியியலாளராக சுமார் இரண்டு வருட காலம் தனது சேவையை ஆற்றிய இவர் தமது சேவைக் காலத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களையும் தனது மேற்பார்வையில் தீர்மானிக்கப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கி மக்கள் பாவனைக்காக ஒப்படைந்திருந்தார்.

இதேவேளை, கட்டடங்கள்திணைக்களத்தின் புதிய நிறைவேற்று பொறியியலாளராக என்.திருநாமம் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5-85)

## வணிக போட்டிகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய மட்ட வணிகப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

தரம் 10, 11, 12, 13 ஆகிய பிரிவுகளுக்கிடையே கட்டுரை, குறுவினா, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களை குறிப்பிட்ட தினத்தில் பங்கு கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் எஸ். தேவதாஸ் அறிவித்துள்ளார். (ம-266)


# கால்நடைகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் மாடுகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் மேற்கொள்ளப்படும் என வவுனியா நகரசபையின் பதில் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக வவுனியாவில் திரியும் கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்பட்ட வாகன விபத்துக்களால் பலர் காயமடைத்ததோடு பல பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

இதற்கமைவாக கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் நகர சபைக்கும் இடையில் இடம்பெற்ற



அவசர சந்திப்பை அடுத்தே இந் நடவடிக்கை உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தொழில்சார் உத்தியோகத்தர்களின் பல முறைப்பாட்டு கடிதங்கள் மற்றும் கோரிக்கைகள் எமக்கும் பொலிஸாருக்கும் கிடைத்துள்ளன. இதற்கமைவாக வீதிகளிலும் பொது இடங்களிலும் காணப்படும் மாடுகளை பிடிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைக்கு நகரசபையின் சுகாதார பிரிவின் விசேட ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந் நடவடிக்கைக்கு பொறுப்பாக எமது நகரசபையின் சிரேஷ்ட உறுப்பினரும் சுகாதார குழுத் தலைவருமான சு.குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாடுகள் பிடிக்கப்பட்டு நகரசபையில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைத்து பராமரிக்கப்படும். மாடுகளை உரியவர் பெற வேண்டுமாயின் ஒரு நாள் கட்டணம் 750 ரூபா, பிடி கூலியாக 400 ரூபா, பராமரிப்பு 250ரூபா செலுத்த வேண்டும்.

கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு 72 மணித்தியாலங்களுக்குள் மீளப்பெற தவறும் பட்சத்தில் அம் மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வைரவபுளியங்குளம் ஏ-9 வீதி, வேப்பங்குளம், பூந்தோட்டம் போன்ற பகுதிகளில் தான் கூடுதலான கட்டாக்காலி மாடுகள் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்களை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதேபோல் வவுனியா நகரில் கட்டாக்காலி நாய்களையும் கட்டுப்படுத்த பம்பைமடு பிரதேசத்தில் விசேட பண்ணை அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-250-266)




## வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு ஆவணங்கள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் நல்லூர் கிராம சேவகர் பிரதேசத்திற்கு வழங்கப்பட்டு வருகின்ற வீட்டுத் திட்ட பயனாளிகளில் உரிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்படி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் 365 பேருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு காணி உறுதியோ உத்தரவுப் பத்திரங்களோ இல்லை.

மேற்படி நிறுவனம் உரிய ஆவணங்கள் இருப்பவர்களுக்கு மட்டுமே வீட்டுத் திட்ட உதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

இதனால் ஆவணங்கள் இல்லாத மக்கள் வீட்டுத் திட்டத்தை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயினும் ஆவணங்கள் இல்லாத மக்களுக்கு அவற்றினைப் பெற்றுக் கொடுக்க பூநகரிப் பிரதேச செயலர் முயற்சிகளை எடுத்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ம-84)

## ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

காயம் ஏற்படுத்தும் நோக்கில் மண்வெட்டியால் அடித்து சிறுகாயம் ஏற்படுத்திய நபருக்கு 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

காயம் ஏற்படுத்தும் நோக்கில் மண்வெட்டியால் அடித்து சிறுகாயம் ஏற்படுத்திய நபரை விசாரணை செய்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கியதுடன் காயமடைந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்குமாறும் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டார். (ம-267)

* * *

குற்றம் புரியும் நோக்கில் காணிக்குள் அத்துமீறி உட்புகுந்து வியாபார நிலையம் மற்றும் வீட்டு சொத்துக்களை சேதப்படுத்திய நபருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நபரை விசாரணை செய்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கியதுடன் மேற்குறித்த 2 குற்றங்களில் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஆயிரம் ரூபா வீதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார். (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைப்புக்கான முன்மொழிவு கிடைக்கவில்லை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்திலுள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கான திட்டங்கள் தொடர்பாக பிரதேச சபையினருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச சபை உறுப்பினர் மயிலுசத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசத்தின் வதிரிவீதி, கூவற்கரை பிள்ளையார் வீதி, மடையான் தோட்ட வீதி, சுங்கம் குளவீதி, எல்லம்குளவீதி ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கான திட்டங்களே கரவெட்டி பிர்தேச சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆயினும் இது வரை அவற்றுக்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை என பிரதேச சபை உறுப்பினர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-60)


## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 31.05.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை சண்முகராசா (ஐயா)**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.06.2013 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 30.06.2013 ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல்10 மணியளவில் நடைபெறும்.

அத்துடன் அன்னாரின் நினைவாக (இணுவை ஐயா எண்ணமலர்) எனும் சிறப்பு மலர் வெளியீடும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வே.சண்முகராசா**
**குடும்பத்தினர்**

இல. 140, கண்ணன் மில்,
இணுவில் மேற்கு, இணுவில்

தொ.பே: 0714966658

(3104)


### மாதுறு ஓயா தேசிய பூங்காவில் தீ

(கொழும்பு)


மாதுறு ஓயா தேசிய பூங்காவில் தீ பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ பரவல் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்டுள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், விமானப் படையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினருடன் பிரதேச வாசிகளும் இணைந்து தீயைத்--

தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். (அ-2)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
20.07.1940

இறைவன் அடியில்:
21.07.2011

**அமரர் வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி**
(பொறியியலாளர்)

கண்ணை இமை காப்பதுபோல்
காலமெல்லாம் எமைக்காத்து வந்த - எம்
பெரும் சொந்தம் எமைப் பிரிந்து சென்று
இன்றுடன் ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ!

தந்தை பணி மட்டுமின்றி - அன்பிலே
தாயுமாகி நின்று - எம்
சிந்தயை நிறைத்த எம் தந்தையே
அன்று உங்களைப் பிரிந்ததில் இருந்து
இன்றுவரை இருட்டிலே வாழ்வது போல் ஓர்
தோரணையில் வாழ்கின்றோம்.

யாதுமாகி நின்ற எம் தந்தையே
போதும் இந்த இருள் விளையாட்டு
சோர்ந்து போன எம் மனங்களின் சோர்வை நீக்கி
புத்துயிர் பெற்று நாம் புதுவாழ்வு வாழ
இறை அருளோடு - உங்கள்
ஆத்மாவின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:**
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


எரிச்சோலை, சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(சி-3773)



# மரண அறிவித்தல்

## திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்



**தோற்றம்:-22.04.1934** **மறைவு:-24.06.2013**

வல்வெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் (24.06.2013) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் அன்னபூரணம் அவர்களின் அன்புக் கணவரும், நளாயினி (இலங்கை), உருத்திரசிகாமணி, சுசிலாதேவி (இலங்கை), றஞ்சனாதேவி (பிரான்ஸ்), பிரபாகரன் (மோகன்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருளாநந்தம் (பிரான்ஸ்), அமுதநாயகி (பிரான்ஸ்), செல்வராஜா (பிரான்ஸ்), விஜயகலா (பிரான்ஸ்), சண்முகேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சண்முகப்பிள்ளை, தங்கச்சிப்பிள்ளை, சுந்தரி, சுப்பிரமணியம் மற்றும் கனபதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அருமை சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.06.2013 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி/3788)

பழைய பொலிஸ் ஸ்ரேசன் வீதி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

தகவல் :- குடும்பத்தினர்.
T.P.0772105300


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.

-லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொது பல சேனா தேரரை நான்காம் மாடிக்கு அழைத்தால் என்ன?

இலங்கை பௌத்த சிங்கள நாடு. இங்கு வேற்று மதங்களின் அமைப்புக்கள் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் பொது பல சேனா அமைப்பு உத்தியோகப்பற்றற்ற பொலிஸாக மாறும். இவ்வாறு பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கூறியுள்ளார்.

மிகப் பகிரங்கமாக தேரர் கூறி உள்ள விடயம் இந்த நாட்டின் இன மத ஒற்றுமைக்கு பாதகமானது என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

நாட்டின் இன மத ஒற்றுமையை யார் சீர்குலைத்தாலும் அது பயங்கரவாதம் என்ற பட்டியலுக்குள்ளேயே அடக்கப்படவேண்டும்.

ஆனால், இலங்கையில் பெரும்பான்மை இனம் சார்ந்தவர்கள் ஏனைய இனங்கள் தொடர்பில் வன்மைத்தனமாக கூறும் கருத்துக்கள் குறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை.

அதாவது பெரும்பான்மை இனத்திற்கு பாதகமானது என்றால் மட்டுமே அது பயங்கரவாதமாக கருதப்படுகின்றது. மாறாக சிறுபான்மை இனங்கள் – அவர்கள் சார்ந்த மதங்கள் தொடர்பில் எத்தகைய விசமத்தனங்களை அள்ளி வீசினாலும் அது இந்த நாட்டின் தேசப்பற்றாக, மகாவம்சத்தை காக்கும் மதக் காப்பாகக் கருதப்படுகின்றது.

இதற்கு நல்ல உதாரணம், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஆவார்.

பல சந்தர்ப்பங்களில் இனவாதத்தையும் மத வாதத்தையும் கொட்டிக் குவிக்கும் தேரர் இந்த நாட்டின் சிறுபான்மை இனத்திற்கு எதிராக பெரும்பான்மை இனத்தினரை தூண்டுகின்றார்.

1983 யூலைக் கலவரம் போன்ற ஒன்றை ஏற்படுத்துவதோ அவரின் குறிக்கோளாக உள்ளது. பெரும்பான்மை மக்கள் தேரர் போன்ற பேரினவாதிகளின் கபடத்தனங்களை அறிந்து வைத்திருப்பதன் காரணமாக இன வன்முறையில் ஈடுபடாமல் இருக்கிறார்களே தவிர,

அரசு எடுத்த நடவடிக்கை காரணமாக அமைதி நிலை நீடித்ததாக எவரும் கற்பனை செய்துவிடக் கூடாது.

நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தார்கள் எனக்கூறி எத்தனையோ தமிழர்களை நான்காம் மாடிக்கு அழைத்து விசாரணை செய்த குற்றத் தடுப்பு பிரிவு, பொது பல சேனா அமைப்பின் தேரரை நான்காம் மாடிக்கு அழைக்காதது ஏன்? இன ஒற்றுமையை சிறுபான்மையினர் மட்டுமே கட்டிக்காக்கவேண்டும் என்றா குற்றத் தடுப்பு பிரிவு கருதுகின்றது?

தேச ஒற்றுமை என்பது ஒரு தரப்பால் மட்டும் பாதுகாக்கப்படுவது அல்ல. மாறாக அது முழுஇனங்களாலும் காப்பாற்றப்பட வேண்டும்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு எனத் தேரர் கூறுவதற்குள் இருக்கக் கூடிய கருத்து; இலங்கை என்ற நாட்டில் வேறு இனங்களுக்கும் பிற மதங்களுக்கும் இடம் இல்லை என்பதாகும்.

பௌத்தத்திற்கும் சிங்களத்திற்கும் இந்த நாடு சொந்தம் என்றால் ஏனைய இனங்களையும் மதங்களையும் இந்த நாட்டில் வேரோடு அறுக்க வேண்டும் என்பது தானே பொருள்.

ஒரு பௌத்த துறவி இத்தனை தூரம் இனவாதத்தையும் மதவாதத்தையும் தன் நெஞ்சில் குவித்து வைத்திருக்கிறார் என்பதை நினைக்கும் போது இந்தத் துறவி எதைத்தான் துறந்தாரோ? என எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தால் நலிந்து சிதைந்து போன இலங்கை மண்ணில் மீண்டும் போர் முரசம் கேட்பதை எந்த மக்களும் விரும்பமாட்டார்கள்.

அத்தகைய ஒரு விருப்பை வலுக்கட்டாயமாக திணிப்பதற்கும் எவரும் முயற்சிக்கக் கூடாது.

அத்தகைய முயற்சியை எவர்கொண்டிருந்தாலும் அவர்கள் நாட்டின் ஒற்றுமைக்கு நாசம் செய்கிறார்கள் என்ற பேரில் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தமது சீவியத்திற்கான முதலீட்டுப் பொருளாக கொள்ளும் மிக மோசமான கலாசாரம் இந்த நாட்டில் மேன்மேலும் பெருக்கமடையும்.

ஆகையால், அவர் இவர் என்ற பாகுபாடு இன்றி எவர் இன மத ஒற்றுமையைக் குலைத்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இல்லையேல் நாட்டின் ஒற்றுமை கேள்விக்குறியாக மாறிவிடும்.

# எதிர்த்து கருத்துக்கூறினால் பழிவாங்க நினைக்காதீர்

## அமைச்சர் டக்ளஸ் அட்வைஸ்

எதிர்த்து கருத்துச் சொன்னால் பழி வாங்கும் காலம் போய்விட்டது. பொது இணக்கப்பாட்டுக்கு கருத்துப் பரிமாற்றம் தடையாயிருக்கக்கூடாது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் பல்வேறு சம்பவங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் அதிகாரிகளினாலும் துறைசார்ந்தோர்களினாலும் கருத்துக்கள் கூறப்பட்டன.

ஒவ்வொருவராலும் கூறப்பட்ட கருத்துக்கள் சிலரைப் பாதித்திருக்கக் கூடும். அதற்காக பழிவாங்க வேண்டும் எனக் கருதக்கூடாது. கருத்துக்களுக்கு பழி வாங்கும் காலம் போய்விட்டது. பொது இணக்கப்பாட்டுக்கு கருத்துக்கள் தடையாக இருக்கக் கூடாது. அத்தோடு இங்கு சமுகமளித்துள்ளஊடகவியலாளர்கள் கூட்டத்தில் இடம்பெற்ற விடயங்களை முரண்பாடு ஏற்படாத வகையில் பிரசுரிக்க வேண்டும்.

மேலும் யாழ்.சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் நடத்தும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஜூலை மாதம் 27-ம் திகதி கூட்டம் இடம் பெறும். அதில் ஏதும் தடைகள் இருப்பின் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## திவிநெகும திட்டத்தின் கீழ் மக்களுக்கு முருங்கைக் கன்று

(யாழ்ப்பாணம்)

திவிநெகும திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு முருங்கைக் கன்றுகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முருங்கைக் கன்றுகள் யாழ். மாவட்டத்திற்கு கொண்டுவரப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகள் தோறும் முதற்கட்டமாக தலா ஏழுபது முருங்கைக் கன்றுகள் என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

தற்போது இது சம்பந்தமான அறிவித்தல்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டு பயனாளிகளின் பட்டியல்களும் பெறப்படுகின்றன. (அ-6)

## இரு குற்றச்சாட்டுக்களுக்கு 10500 ரூபா அபராதம் விதிப்பு

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் ஒருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் குறித்த நபருக்கு எதிராக பொலிஸாரால் சுமத்தப்பட்ட இரு குற்றச்சாட்டுக்களை பருத்தித்துறை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் சம்பவ தினம் குறித்த நபர் மோட்டார் சைக்கிளை மது போதையிலும் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வருமான வரிப்பத்திரம் என்பன இன்றியும் செலுத்தியதாக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் வல்வெட்டித் துறைப் பொலிஸார் குறித்த நபரை ஆஜர்படுத்தினர்.

இந்நிலையில் மதுபோதை, சாரதி அனுமதிப் பத்திரம் ஆகிய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்ட நீதவான் மற்றைய இரு குற்றச் சாட்டுக்களான காப்புறுதிப் பத்திரம், வருமான வரிப்பத்திரம் என்பவற்றை குறித்த நபர் மோட்டார் சைக்கிளுக்குள் வைத்திருப்பதாக மன்றில் தெரிவித்ததையடுத்து அவ்விரு குற்றச் சாட்டுக்களையும் நிராகரித்தார்.

இதனால் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்காக 7 ஆயிரத்து 500 ரூபாவும் சாரதி அனுமதி பத்திரமின்றி செலுத்தியமைக்காக 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறும் கூறி ஏனைய இரு குற்றச் சாட்டுக்களை நிராகரித்தும் நீதவான் தீர்ப்பளித்தார். (அ-24)

## மஹோற்சவம்

இருபாலை கிழக்கு கந்தசாமி (முனி கோவில்) ஆலய வருடாந்த அலங்கார மஹோற்சவம் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைவடையவுள்ளது. ஞாயிறு பகல் சங்காபிஷேகம் நடைபெற்று மாலை சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (அ)

## இசை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

கற்கோவளம் பருத்தித்துறை இசை வானம் இசை மன்றத்தால் நாளை சனிக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது எனவும் இந்நிகழ்ச்சிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் இசை வானம் இசை மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (அ)




**பேச்சு**

நபிகள் நாயகம் (ஸல்) நயின்றார்கள். "எவர் உண்மையிலேயே அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறாரோ அவர் உண்மையே பேசட்டும். அல்லது மௌனமாக இருந்து விடட்டும்". (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

'எவர் அமைதியாயிருக்கிறாரோ அதுவரை அவர் பாதுகாப்பாக இருக்கிறார்.' (நூல்: திர்மிதீ)




கோலப்புனைவிற்கு நிறங்களின் ஒன்றிணைப்பு மிகவும் இன்றியமையாதது.நிறங்கள் ஓர் ஒழுங்கிலே இணையும் போது அங்கு ஒரு கவின் தோன்றும். சம்பந்தர் 'கவின் தருவது நீறு' எனப் பாடியுள்ளார். வெண்ணீறு பூசிய நெற்றி தரும் கோலம் இது. இறைவனுடைய திருவருட் கோலத்தைப் பாடவந்த மணிவாசகர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'வெளியாய் கரியாய் பச்சையனே செய்யமேனியனே'

இத்தொடர் மேலோட்டமாக நோக்கும் போது வெண்மை, கருமை, பசுமை, செம்மை ஆகிய நிறங்களையுடைய திருமேனியையுடையவனே எனப் பொருள் தரும். ஆனால் இறைவனுடைய ஐந்துமுகமுடைய திருக்கோலத்திலே உள்ள ஐந்து நிறங்களில் நான்கு நிறங்களையே இத்தொடர் குறிப்பிட்டுள்ளது. திருமுகன் ஐந்தனுள் ஈசானம் பசுமையும் வெண்மையும் தற்புருஷம் பொன்மையும் அகோரம் கருமையும் வாமதேவம் செம்மையும் சத்தியோசாதம் நல்ல வெண்மையுமுடையதாகும்.

மிகுந்த குளிர்ந்த நீரும் வானும் காற்றும் நிலமும் நெருப்புமாகிய ஐம்பூதங்களிடத்தும் பரந்துநிற்பவன் இறைவன் நீருக்கு வெண்மையும் விண்ணுக்குப் பசுமையும் காற்றுக்கு கருமையும் நிலத்திற்குப் பொன்மையும் நெருப்பிற்குச் செம்மையும் உரிய நிறங்களாகக் கொள்ளப்படும் மரபும் உண்டு. இன்னும் உமையம்மையை ஒரு கூறாகக் கொண்டிருப்பதால் பச்சையனே செய்யமேனியனே என்பது பிறிதொரு பொருளைத் தரும். உமையம்மையிருக்கும் இடப்பாகம் பச்சை நிறமுடையவனாகவும் வலப்பாகம் செம்மை நிறமுடையவனாகவும் இருப்பான். நீற்றுப்பூச்சையுடையவனாதலால் வெண்ணிறமுடையவன். நீலநிறமுள்ள கண்டத்தையுடையவன். இறைவன் திருக்கோல நிறங்களை மணிவாசகர் காட்டிய முறைமையோடு மேலும் பல நிலைகளிலும் காணலாம். காரைக்காலம்மையார் மணிவாசகருக்கு முன்னரேயே இறைவனது திருக்கோல நிறங்களை இயற்கைத் தோற்றங்களின் நிறங்களோடு தொடர்புறுத்திப் பாடியுள்ளார்.அடுத்து மணிவாசகர் இறைவன் ஆடையைப் பற்றி ஒரு குறிப்பைத் தருகிறார்.


'ஒண்பட அரவக் கச்சையனே'

ஒள்ளிய படத்தையுடைய பாம்பாகிய கச்சையை அணிந்தவனே என அவர் கூறுவதை இன்றைய இளம் தலைமுறையினர் கேலி செய்யக் கூடும். ஆனால் இன்று பாம்பின் தோல் கொண்டு மேலாடைகளும் கைப்பைகளும் செய்யப்பட்டு அவை நாகரிகச் சின்னங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர்கள் கருத்திற் கொள்ளவேண்டும். இறைவனுடைய ஆற்றல் பற்றிக் கூறும்போது பெரிய கால்களையுடைய வலிய கஜா சுரன் என்னும் யானையைக்கொன்று வெற்றி கொண்டதைக் காட்டுகிறார். இறைவனின் மறக்கருணையை இதன் மூலம் விளக்கியுள்ளார். எனவே பிழை செய்த தன்னையும் கைவிடாதொழிதல் வேண்டும் என வழிபட்டு நிற்கிறார். வழிபாடு ஐம்பூதங்களுடனும் தொடர்புபட்டது. பண்டைக் காலம் தொட்டுத் தமிழர் நிலம், நீர், தீ, வளி, வான் என்பவற்றை அவற்றின் ஆற்றல் கண்டு வழிபட்டனர். அந்த வழிபாடு தலைமுறைக் கையளிப்பாக இன்று வரையும் தொடர்வதும் குறிப்பிடத்தக்கது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

சச்சையனே மிக்க தண்புனல் விண்
கால் நிலம் நெருப்பாம்
விச்சையனே விட்டிடுதி கண்டாய்
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியனே
ஒண்பட வரவக்
கச்சையனே கடந்தாய் தடந்
தாள அடற்கரியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆகாயத்திலிருந்து 480 கோடி மக்களுக்கு இணைய வசதி

## ஆரம்பமாகியது கூகுளின் அடுத்த புரட்சி

இன்டர்நெட் இணைப்பினை பூமியின் மூலை முடுக்கெல்லாம் தர வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த ஜூன் 15 அன்று, ஜெல்லி மீன் வடிவில் அமைக்கப்பட்ட, ஒவ்வொன்றும் 20 பவுண்ட் எடையுள்ள, 30 இணைய பலூன்களை பறக்க விட்டு சோதனை செய்துள்ளது கூகுள் நிறுவனம். இந்த இணைய பலூன்களில், சோலார் தகடுகளுடன், அன்ரனாக்கள், கணனிகள், மின்னணு சாதனங்கள், ஜி.பி.எஸ். சாதனங்கள், பற்றரிகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

நியூசிலாந்தின் தெற்குத் தீவில் உள்ள டெகாபோ ஏரியின் அருகே இருந்து இந்த பலூன்கள் பறக்கவிடப்பட்டுள்ளன. இதன் மூலம், இணைய தொடர்பு கிடைக்க இயலாத, பூமியின் பல இடங்களில் வாழும் 480 கோடி மக்களுக்கு, இணைய இணைப்பு கிடைக்க இருக்கிறது.

லூன் திட்டம் (Loon Project) என அழைக்கப்படும் இந்த திட்டம், தொலைவான இடங்களில் வாழும் அனைவருக்கும், எப்படியேனும், இணைய இணைப்பினைத் தரும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இணைய பலூன்களில், ஹீலியம் வாயு நிரப்பப்பட்டு, இணைய இணைப்பு தருவதற்கான ட்ரான்ஸ்மீற்றர் சாதனங்கள் இணைக்கப்பட்டிருக்கும். மொத்தம் 30 பலூன்கள், பூமிக்கு மேலே 12 மைல் தூரத்தில், ஸ்ட்ராட்டோஸ்பியர் என அழைக்கப்படும் பகுதியில் பறக்கவிடப்படும். இவற்றின் விட்டம் 49 அடி. 780 ச.மைல் அல்லது 1,250ச. கிலோ மீற்றர், பரப்பில் வாழும் மக்களுக்கு, ஒவ்வொரு பலூனும் இணைய இணைப்பினை வழங்க முடியும். இந்த பலூன்கள், கூகுள் எக்ஸ் சோதனைச் சாலையில், கூகுள் கிளாஸ் மற்றும் கூகுள் ட்ரைவர் இல்லாமல் இயங்கும் கார் ஆய்வுத் திட்ட விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் நாடுகள், இணைய இணைப்பிற்கென, பைபர் கேபிள்களை அமைப்பதற்கான செலவினை மேற்கொள்வது கடினம் என்பதால், இந்த ஏற்பாட்டினை கூகுள் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த இணைய பலூன்கள், மிக மெல்லிய பாலிதைலீன் பிலிம் கொண்டு உருவாக்கப்பட்டவை.

நியூசிலாந்தின் தெற்கு ஏரி அருகே இருந்து அனுப்பப்பட்ட இவை, வெகு எளிதாக, ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சென்றதாக, இதனை அனுப்பிய விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இவை நம் கண்களுக்குப் புலப்படாத தூரத்தில் பறந்து இணைய இணைப்பினை வழங்கி வருகின்றன. இதில் இணைக்கப்பட்டுள்ள, சிறிய டேபிள் அளவில் உள்ள சோலார் பேனல்கள், இவை செயற்படுவதற்குத் தேவையான மின் சக்தியை நான்கு மணி நேரத்தில் பெற்று தருகின்றன. தரையில் அமைக்கப்பட்டுள்ள இணையக் கட்டமைப்பில் செயற்படும் மையங்களிலிருந்து, இந்த இணைய பலூனில் உள்ள ரிசீவர்களுக்குத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. ஒவ்வொரு பலூனும், 780 சதுர மைல் அளவில், இணையத் தகவல்களை வழங்குகின்றன. அது மட்டுமின்றி, ஒரு பலூனிலிருந்து, அதிக பட்சம் ஐந்து பலூன்களுக்குத் தகவல்கள் அனுப்பப்படுகின்றன. ஸ்ட்ராட்டோஸ்பியர் என அழைக்கப்படும், குறிப்பிட்ட விண் எல்லையில், இந்த பலூன்கள் சென்று செயற்படத் தொடங்குகையில், மனிதனின் கண்களுக்கு இவை புலப்படாது. இவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்வதால், விண் வெளியில், ஓர் இணைய இணைப்புக் கட்டமைப்பு ஏற்படுகிறது.

இதன் மூலம் உலகின் அனைத்து மூலைகளுக்கும் இணைய தொடர்பினை வழங்க முடியும். எடுத்துக்காட்டாக, ஆப்கானிஸ்தானின், மிக ஆழமான, வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதைகளையும், அங்கு வசிக்கும் மக்களையும், இந்த பலூன் வெளிப்படுத்தும் சிக்னல்கள் எளிதாக அடைய முடிந்தன. நூற்றுக்கு நான்கு பேர் மட்டுமே இணைய இணைப்பு தற்போது பெற்று வரும், கேமரூன் நாடு முழுவதும், இந்த பலூன்கள் இணைய இணைப்பினைத் தந்தன. பைபர் கேபிள்களை அமைத்து இணைய இணைப்பினை வழங்குவதைக் காட்டிலும், பரந்து விரிந்த ஆகாயத்தைப் பயன்படுத்தி, குறைந்த செலவில், உலகம் முழுமைக்கும் இணைய இணைப்பினை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற இலக்குடன் இந்த பலூன் இணைய இணைப்பு சோதனை மேற்கொள்ளப்பட்டது. பல நூறு இணைய பலூன்களை, விண்வெளியில், வளையங்களாக நிற்க வைத்து, இணைப்பு கொடுத்து, உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் இணைய இணைப்பு வழங்குவதே, இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும் என இத்திட்டத் தலைவர் மைக் கேசிடி குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் செயற்பாட்டினை சோதனை செய்திட, உலகின் பல இடங்களில் இருந்து, தன்னார்வ இணையப் பயனாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களின் வீடுகளில், 'பாஸ்கற் போல்' அளவிலான, சிகப்பு ரிசீவர்கள் பொருத்தப்பட்டன. பயனாளர்களுக்குத் திட்டத்தின் முழு விபரமும் வழங்கப்படவில்லை. இணைய இணைப்பு மற்றும் செயற்பாடு குறித்த தகவல்களே திரட்டப்பட்டன.

இந்த இணைய பலூன்கள், 3ஜி தகவல் வேகத்தைக் கொண்டுள்ளன. உலகில், மனிதர்கள் எளிதில் செல்ல முடியாத இடங்களில் ஏற்படும் பேரிடர் காலங்களில், இந்த இணைய இணைப்பு பலூன்கள் மூலம் தகவல் பரிமாறிக் கொள்வது எளிதாகும். இதனால் உயிர் இழப்பு தடுக்கப்படும்.

இவ்வகை இணைப்பின் மூலம், இணையப் பயனாளர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இதனால், கூகுள் போன்ற இணைய விளம்பர நிறுவனங்களின் வருமானம் பெருகும். இந்த திட்டத்தில், எவ்வளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது என கூகுள் அறிவிக்கவில்லை. பதினெட்டு மாத கடும் உழைப்பு மற்றும் ஆராய்ச்சிக்குப் பின்னர் இந்த இணைய பலூன்களின் செயற்பாடு சாத்தியமாகியுள்ளது.

கிறைஸ்ட் சர்ச் என்ற இடத்திலிருந்து இந்த பலூன்கள் ஏவப்பட்டன. இந்த இடத்தை இந்த திட்டத்திற்கேற்ற இடமாக, கூகுள் தேர்ந்தெடுத்தது. 2011 ஆம் ஆண்டு, ஏற்பட்ட நில அதிர்வில், இந்த இடத்தில் வாழ்ந்த மக்கள், உலகின் ஏனைய இடங்களுடன் தொடர்பற்ற நிலையில், பல வாரங்கள் வாழ்ந்தனர். நில அதிர்வில், 185 பேர் பலியாயினர். இது போன்ற பேரிடர் நிகழ்வுகளில், இணைய பலூன் இணைப்பு செயற்பட்டு, மக்கள் இறப்பதைத் தடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய தகவல்களையும், உதவியையும் வழங்க இயலும்.

# கூகுள் மீது புகார்

கடந்த 2010ஆம் ஆண்டு கூகுள் நிறுவனம் தனது இலட்சியத் திட்டமான கூகுள் வரைபடத் தயாரிப்பிற்காக உலகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட சிறப்புக் கார்களை அனுப்பியது.

கூகுள் 'ஸ் ஸ்ட்ரீட் வியு' என்று அழைக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் மைல்கள் பயணம் செய்த இந்தக் கார்கள், இவற்றில் பொருத்தப்பட்டிருந்த பிரத்தியேகக் கருவி மூலம், இயற்கை எழில் மிகுந்த பகுதிகளுடன் சாலைகளின் வரைபடங்களை பதிவு செய்தன.

ஆனால், அப்போது பணியில் இருந்த பொறியியலாளர் ஒருவர், இந்தக் கார்களின் அருகில் கடந்து செல்வோரின் பாதுகாப்பில்லாத இணையதளப் பதிவுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் ஒரு மென்பொருள் கருவியைத் தயாரித்து இந்தக் கார்களில் பொருத்தியுள்ளார்.

அதில் பலரது சொந்த விடயங்களும், நிதி விபரங்களும் பதிவாகியுள்ளன. இது தங்களது எண்ணமல்ல என்று தெரிவித்த கூகுள் நிறுவனம் அத்தகையத் தகவல்களை அழித்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.




ஆனால், இதுபோல் பதிவுசெய்யப்பட்ட சில தகவல்களைத் தாங்கள் கண்டறிந்துள்ளதாக பிரிட்டிஷ் தகவல் அறியும் அலுவலகத்தில் இருந்து கூகுள் நிறுவனத்திற்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தின் ஆணையாளர் ஸ்டீபன் எக்கர்ஸ்லெ, இதுபோன்ற தகவல்களை 35 நாட்களுக்குள் அழித்துவிட வேண்டும் என்று சட்டபூர்வமாக கூகுள் நிறுவனத்திற்கு அறிக்கை விடப்பட்டது. இதனை செய்யத் தவறினால், நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கருதப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# சாம்சங்கின் புதிய டேப்லட்

முதற்தர இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவமான சாம்சங் மிகவும் மெலிதான தோற்றத்தைக் கொண்ட விண்டோஸ் 8 டேப்லட் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

Samsung ATIV Tab 3 என அழைக்கப்படும் இவை 10.1 அங்குல அளவு, 1,366 x 768 Pixel Resolution உடைய திரையினைக் கொண்டுள்ளதுடன் Atom Z2760 Processor, 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளன.

550 கிராம்கள் எடைகொண்ட இந்த டேப்லட்களில் 64GB சேமிப்பு நினைவகம் தரப்பட்டுள்ளதுடன் micro SD கார்ட்டின் உதவியுடன் மேலும் 32GB வரை அதிகரிக்க முடியும்.

மேலும் இந்த டேப்லட்களில் 10 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலங்கள் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

# Oxford இல் Tweet



சொற்களைத் தன் அகராதியில் ஒரு சொல்லாக இணைக்க வேண்டும் எனில், அந்த சொல் குறைந்தது பத்து ஆண்டுகளாவது புழக்கத்தில், ஒரே பொருளுடன் இருக்க வேண்டும் என்ற விதியை, ஒக்ஸ்போர்ட் அகராதி ஆசிரியர் குழு கொண்டுள்ளது. அண்மையில், தன் இந்த விதியைத் தளர்த்தி, "Tweet" என்ற சொல்லைத் தன் அகராதியில் இணைத்துக் கொண்டுள்ளது. இதனை ஒரு பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

டுவிட்டர் இணைய தளத்தில் பதிவு செய்திடுவதனையே இந்த சொல் குறிக்கிறது. டுவிட்டர் சமூக இணைய தளம் தொடங்கி, சென்ற மார்ச் மாதத்துடன் ஏழு ஆண்டுகளே ஆன நிலையில், இந்த சொல் சேர்க்கப்பட்டிருப்பது, இது பரவலாக, உலகம் எங்கும் பயன்படுத்தப்படுவதனையே காட்டுகிறது. இதே போல "follow" என்ற சொல்லுக்கான பொருளைத் தருகையில், பேஸ் புக் அல்லது கூகுள் ப்ளஸ் போன்ற வலைத் தளங்களில், ஒருவரின் பதிவினைத் தொடர்ந்து கருத்து தெரிவித்தல் என்ற பொருளையும் சேர்த்துள்ளது. இந்த பொருளில், இச்சொல் பயன்படுத்தும் பழக்கம் உலகளாவிய அளவில் பெருகியதே இதற்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு குழிபறிக்க...

படுத்தி ஷிராணி பண்டாரநாயக்க நீதிமன்ற வளாகத்தினுள் பிரவேசிப்பதை வலுக்கட்டாயமான முறையில் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்நிலையில் ஷிராணி பண்டாரநாயக்க விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான நீதிமன்றத் தீர்ப்புக்கள் அப்படியே இருக்கும்நிலையில்மகிந்த ராஜபக்ஷ, மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாது. அப்படி அவர் போட்டியிடமுடிவெடுத்தாலும் அதற்கெதிராகவழக்குத் தொடரப் படக்கூடிய நிலை காணப்படுகிறது.

இதனைத் தவிர்ப்பதாயின் தமக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பை இரத்துச் செய்விக்க வேண்டும். ஆனால் அதற்கு உச்ச நீதிமன்றநீதியரசர்களில்பெரும்பான்மையானவர்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும். ஆனால் அது சாத்தியப்படும் நிலையில் இல்லை.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று ஒரு சட்டவிதி இருக்கின்ற போதிலும், 35 (2) சட்டவிதிகளின் பிரகாரம் இரண்டு தடவைகள் பதவிக் காலம் (12 ஆண்டுகள்) பதவியில் இருக்கும் வரை மட்டுமே ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

அப்படியே ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதிலிருந்து சட்ட விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்வதற்கு எந்தத் தடையும் இல்லை.

இவ்வாறான நிலையில் சட்ட விதிகளின் பிரகாரம் அடுத்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து மகிந்த ராஜபக்ஷ தடுக்கப்படும் பட்சத்தில், தான் போட்டியிட வேண்டும் என்பதே கோத்தபாய ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கேற்றவாறு அவர் காய் நகர்த்தி வருகின்றார்.

அதற்காகவே தன்னை கடும்போக்கு சிங்களவராக காட்டிக் கொள்ளும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். பொது பல சேனா போன்ற தீவிர சிங்கள அமைப்புக்களை ஆதரித்து, அவர்களின் மூலம் அடுத்த ஜனாதிபதிக்கு பதவிக்கு பொருத்தமானவர் கோத்தபாய என்று சொல்ல வைக்கின்றார்.

இப்படியான செயற்பாடுகள் மூலம் எப்படியும் தான் அடுத்த ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கு யாரேனும் தடையாக இருக்கும் பட்சத்தில் இராணுவம் மற்றும் பொலிஸை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, இராணுவ ஆட்சியைத் தொடரவும் அவர் தயங்கமாட்டார் என்று கூறப்படுகிறது.

மறுபுறத்தில் ஜனாதிபதியைப் பலவீனப்படுத்தும் வகையிலான அரசியல் செயற்பாடுகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டு வருகின்றார். முன்னைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்ப திலும் அவர் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இதையெல்லாம் உணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த, சரத்பொன்சேகாவைத் தன் பக்கம் இழுத்தெடுப்பதில் கவனம் செலுத்தி வருவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரத் பொன்சேகாவின் ஜெனரல் பதவி மற்றும் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமைகள், ஓய்வூதியம் என்பவற்றை திரும்ப வழங்கும் வகையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பொன்றை வழங்குவது குறித்து தற்போது கவனம் செலுத்தி வருகின்றார்.

இதன்மூலம் சந்திரிகாவின் அரசியல் செயற்பாடுகளை அப்படியே முடக்கிப் போடுவதுடன் தனது சகோதரர் கோத்தபாயவின் இராணுவரீதியான ஆதிக்கத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்றும் அவ் இணையத் தளம் தகவல்வெளியிட்டுள்ளது. (செ-1)



இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வஸ் கயானி கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று வியாழக்கிழமை மாலை வந்தடைந்தார். அவரை இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய வரவேற்று அழைத்து வருவதை படத்தில் காணலாம்...

# பத்தாயிர...

பில் நேற்று இடம்பெற்ற பௌத்த அமைப்புக்களின் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அலரி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆர்ப்பாட்டக்காரர் சந்திப்பர் எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக கொழும்பு தகவல்கள் கூறுகின்றன.

நேற்றுபிற்பகல்தேர்தல்கள்ஆணையாளரை சந்தித்த பிக்குமார் சிலர் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (செ-1)

# உதைபந்தாட்டம்

வடமராட்சி கரணவாய் கொலிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட மின்னொளியிலான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டம் இன்று இரவு 7 மணிக்கு கொலிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து 48 அணிகள் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றியிருந்தன .

முதலாது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும், வதிரி டைமன்ஸ் அணியும் மோதவுள்ளது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளது.

இறுதிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

# முதல் ரக நீரிழிவு...

கேற்றவாறு உடலின் நோயெதிர்ப்புச் சக்திக்கு பயிற்சி கொடுக்கும் என்று கூறுகின்றன.

இந்தச் சோதனையின்முடிவுகள் மிகவும் முக்கியமானவை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். உடலைத் தாக்குகின்ற பக்ரீரியாக்கள் மற்றும் வைரசுக்களை தாக்குவதற்கான பயிற்சியை உடலின் நோயெதிர்ப்புச் சக்திக்கு (முறைமைக்கு) பயிற்றுவிப்பதே நோய்த் தடுப்புமருந்துகளின் செயற்பாடாகும்.

அந்தப் பயிற்சியின் மூலம் உடலைத் தாக்கவரும் கிருமிகளை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி தாக்கி அழித்துவிடும்.

ஆனால்நீரிழிவுநோயைப்பொறுத்தவரை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி உடலின் பாகங்களை தாக்குவதன் மூலம் அது உருவாகிறது.

அதாவது உடலின் நோயெதிர்ப்புச் சக்தி உடலின் கணயத்தில் உள்ள பீட்டா கலங்களை தாக்குவதால் அது ஏற்படுகிறது.

இந்த பீட்டா கலங்கள் உடலுக்கு தேவையான இன்சுலினை சுரக்கின்றன. ஆனால் நோய் எதிர்ப்புச் சக்தி அந்த பீட்டாக் கலங்களை தாக்கி அழித்துவிட்டால் இன்சுலின் சுரக்க முடியாமல் போய் விடுகிறது. இதன் மூலமே முதல்வகை நீரிழிவு நோய் உருவாகிறது.

ஆகவே இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த புதிய நோய்த்தடை மருந்து உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்கு கிருமிகளை தாக்குவற்கான பயிற்சியை கொடுப்பதற்குப் பதிலாக அந்த நோய் எதிர்ப்புச் சக்தி செயற்படாமல் இருக்க அது பழக்குகிறது.

ஆகவே குறித்த நோய் எதிர்ப்புச் சக்தி கணயத்தின் பீட்டாக் கலங்களை தாக்காது. அதனால் இன்சுலின் தொடர்ச்சியாகச் சுரக்கப்பட முதல் வகை நீரிழிவு நோயும் வராது.

இந்த புதிய நோய்த்தடுப்பு மருந்து இன்சுலினைச் சுரக்கும் குறித்த பீட்டா கலங்களைத் தாக்கும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை செயற்படாமல் இருக்கச் செய்துவிடும்.

இந்தப் பரிசோதனை நல்ல பலனைத்தந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆனால் இரண்டாவது வகை நீரிழிவு நோய் கூடாத உணவுப் பழக்க வழக்கங் களால் ஏற்படுவதால் அதனை இந்த நோய்த் தடுப்புமருந்தால் தடுக்க முடியாது என வும் அவர்கள் தமது விஞ்ஞான சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார். (செ-1)

# புதிய பிரபாகரன் பேச்...

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தினை தொடர்ந்து தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உரிமை தொடர்பாகவும் தமிழ்மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் குரல் கொடுத்து வந்தார்.

தற்போது பொது பல சேன என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தனர். தற்போது தமிழ் மக்கள் மீது அவர்களின் செயற்பாடு ஆரம்பித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றது. தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் எனும் நோக்குடன் மன்னார் மாவட்ட ஆயர் செயற்பட்டு வருகின்றார்.

தமிழ் மக்களுக்கு ஒரு பக்க பலமாக மன்னார் மறைமாவட்ட ஆயர் செயற்பட்டு வருகின்றமையினை பொது பல சேன அமைப்பினால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை இதன் எதிரொலியாக அரச தரப்பில் இருந்து தொடர்ச்சியாக மன்னார் ஆயருக்கு எதிரான விமர்சனங்கள் வெளி வந்த வண்ணம் உள்ளது.

இதன் ஒரு அங்கமாக பொது பலசேன என்ற பேரினவாத அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலா ளர் மாநாட்டின் போது அந்த அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் குறித்த கருத்தை தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் தமிழர் என்பதினால் இலங்கைக்கு எதிராக பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார். மன்னார் ஆயருக்கு எதிராக குரல் கொடுக்க சிங்கள ஆயர்கள் முன்வர வேண்டும் என குறித்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதி நிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்ற நிலையில் மன்னார் ஆயர் தமிழ் மக்களின் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றார்.

ஆன்மீகபணி செய்கின்றவர்கள் தன் மக்கள் சார்பாக்வும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் குரல் கொடுக்க கூடாது என்று எங்கும் குறிப்பிடப் பட வில்லை.

எனவே தமிழ் மக்களின்உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் மன்னார்ஆயருக்கு எதிராக பொது பல சேனா அமைப்பு முன் வைத்துள்ளகருத்தைவன்மை யாக கண்டிப்பதாககுறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-1)

காலத்தை வீணடிக்காதீர்கள்....

மலேசியாவில் வேலைவாய்ப்பு
(7 நாட்களுக்குள் அனுமதி)

➢ கல்வி தகைமைகள் தேவையில்லை
➢ நம்பிக்கை மிக்க நிரந்தர கம்பனிகள்

| | |
|---|---|
| 01, Toshiba Company | 05, Hotels N.C.S |
| 02, Super Market | 06, Marketing Shop |
| 03, M.C | 07, Samsung Company |
| 04, Restaurants | 08, K.F.C |

➢ இது போன்ற உங்களுக்கு விரும்பத்தக்க கம்பனிகளுடனான வேலைகள்.
➢ வேலைகள் ஒழுங்குபடுத்தி தரப்படும். (விரும்பத்தக்க தங்குமிட வசதிகளும் உண்டு.
➢ வருமானம்! 50,000/= => 65,000/= (இது மட்டுமல்ல மேலதிக வேலைகளுக்கு, மேலதிக வருமானமும் உண்டு)
➢ அனுமதிக் கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு:- 0756197738 (C-78)

# ஆணும் பெண்...

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலாசார சீர்கேடுகள்அதிகரித்துவருவதனால்அதனை தடுப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக அமைச்சரினால் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் எழுந்து யாழ் நகரை அண்மித்த பகுதியில் பதிவில்லாமல் இயங்கிவந்த விடுதியொன்று முற்றுகையிடப்பட்ட போது பொலிஸார் போதியளவு ஒத்துழைப்பு வழங்கவில்லை. எமது கலாசாரத்தைப் பாதுகாக்க இணைந்து செயற்படுகின்றனரில்லை எனக்குற்றம் சாட்டினார்.

இதன்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொறுப்பதிகாரி சமன் சிகேரா தாம் செல்லாதற்கான காரணத்தை விளக்கினார். அதாவது 18 வயதிற்கு மேற்பட்ட பெண்ணும் 21 வயதிற்கு மேற்பட்ட ஆணும் தமது விருப்பத்தின்பேரில் விடுதி அறையில் தங்கியிருப்பதை குற்றமாக கருத முடியாது. அதனை தடுக்க சட்டத்தில் இடமில்லை.

இடம் கலாசாரம் வேறுபட்டாலும் வடக்கிற்கும் ஒன்று தான். தெற்கிற்கும் ஒன்றுதான். அதனை நாம் மீறமுடியாது. அவ்வாறு சட்டத்தை மதிக்காமல் நடந்தால் அதற்கான பிரதிபலாபலன்களை நாம் தான் அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

எனவே சட்டத்தை எம்மால் மீற முடியாது. ஆனால் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு கலாசார சீர்கேடுகளைத் தடுக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் எனவும் கூறியதோடு விபச்சாரம் என்றால் என்ன என்பது தொடர்பிலும் விளக்கமளித்தார்.

அதாவது 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் தனியறையில் இருந்தலோ அல்லது பெண்களின் புகைப் படங்களைக்காட்டி பேரம் பேசுவதே விபசசாரம் என விளக்கமளித்தார்.

இதனையடுத்து சாவகச்சேரி பிரதேச சபையை சார்ந்த உறுப்பினர் ஒருவரினால் பொலிஸார் விபச்சாரத்தை ஊக்கப்படுத்துவதாக குற்றம் சாட்டினார். அதற்கும் பொலிஸார் தமது விளக்கமளிக்க, நேற்றைய கூட்டத்தில் கலாசார சீர்கேடு தொடர்பாக பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்குமிடையில் கடும்வாக்குவாதம் இடம்பெற்றது. (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L பொருளியல் நூல்**

நடைமுறை விடயங்கள்
வினா - விடை
2013 A/L & போட்டிப் பரீட்சைகளுக்குரியது
**வே.கருணாகரன்**

விலை: ரூபா.80

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**அன்னை புத்தகசாலை**

(3139)


## ஜனாதிபதி...

மாகாண சபைகளை இரத்துச் செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்து வரும் தேசிய ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மகிந்தவின் நிலைப்பாட்டில் சமூக மயப்படுத்துவதற்காக சாட்டையாளர்கள் சிலர் வெளியில்குதித்துள்ளனர். அவர்கள் அன்று எங்கிருந்தனர் என்பதை ஜனாதிபதியிடம் கேட்கவேண்டும்.

தற்போது ராஜித, வாசு, பீரிஸ் போன்றவர்கள் ரகசியமான முறையில் சந்திரிகாவை சந்திக்கின்றனர். இவர்கள் மகிந்த ராஜபக்ஷ விடம் சென்று நாட்டை பிரிப்பதற்கான நட வடிக்கைகளை இவ்வாறே செய்து வருகின்றனர் எனவும் ஞானசார தேரர் கூறியுள்ளார். (செ-11)


Personal & Group Classes Jaffna-Vavuniya

2D-Drawing 3D-Modeling

**Auto CAD**

Lecturer By: K.N.Mugunthan (D.A)
Cert.in Auto CAD 2D-Drawing
Dept.of Civil Engineering
University of Peratheniya

0775116320
071 8617972

Cert.in Advanced 3D-Modelling in Auto CAD
Dept.of Mech.Engineering
University of Moratuwa

Cert.in Auto CAD 2010
University of Colombo

Cert.in 2D & 3D-Modelling in Auto CAD
Open University of Sri-Lanka

(சி-3796)


## முஸ்லிம் காங்கிர...

உறுப்பினர்களான ரிஸ்வி ஜவஹர்ஷா, ஆப்தீன் யெஹியா ஆகிய இருவரும் வாக்களித்துள்ளனர். அதன் காரணமாக அவர்கள் இருவரையும் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து, கட்சியில் அவர்கள் வகிக்கும் சகல பதவிகளிலிருந்தும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கட்சி யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கொண்டு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடை நிறுத்தியுள்ளார்.

இவர்களுக்கு அதற்கான கடிதத்தை கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி அனுப்பிவைத்துள்ளார். இவர்கள் இருவரிடம் இருந்தும் விளக்கம் கோரும் கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளன. நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்திலும் இவ் விவகாரம் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது. முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த மற்றொரு வடமேல் மாகாண சபை உறுப்பினரான தஸ்லீம் வாக்களிப்பு இடம்பெற்ற சமயம் நாட்டில் இருக்கவில்லை என தெரியவருகிறது. (செ-11)


வரப்பிரசாதமான அபூர்வ நிகழ்வு

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க, உழைக்க
"உடனடி அனுமதியும் நேர்முகத் தேர்வும்"
(14 பேருக்கு மட்டும் இவ் அரிய வாய்ப்பு)

**சைப்பிரஸ் விசா ஆலோசனைத்துறையில் தனித்துவமான விசா விற்பன்னர்கள் கலந்து சிறப்பிக்கும் யாழ்.நகரில் முக்கிய நிகழ்வு.**

சைப்பிரஸில் படிக்க, உழைக்க
( 40 வயதிற்குட்பட்டோர் )
O/Lம் தேவையில்லை

- உணவு இலவசம்
- ஒரு இலட்சம் சம்பாத்தியம்
- இருப்பிடம் இலவசம்
- 4 வருட விசா

(50% கட்டணச் சலுகை)

இடம் :- திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் கேட்போர் கூடம்
காலம்:- 30.06.2013 ஞாயிறு
நேரம்:- தொலைபேசி மூலம் முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090



(C-3792)



**Clerk தேவை**

யாழ். நகரிலுள்ள நிறுவனம்
ஒன்றிற்கு 40 வயதிற்கு
உட்பட்ட
Clerk (Female) தேவை

**T.P:- 0217904941**

(C-3793)



**வேலையாட்கள் தேவை**

லைடன் புடைவையகத்திற்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை. பழக விரும்புபவர்கள் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**லைடன் புடைவையகம்**
410. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2381

(சி-3772)



## கல்வியாண்டு - 2013

### விண்ணப்பம் கோரல்

**சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்.**

**(ACCA) ASSOCAITION OF CHARTERED CERTIFID ACCOUNTANTS – U.K** (சான்றிதழ்) அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம் இன் கற்கை நெறியை யாழ் நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

ACCA, UK இனால் **Gold** அங்கீகாரம் பெற்ற பயிற்சி வழங்கும் நிறுவனமான **K-AIMS** ஆனது 2012ஆம் ஆண்டு தனது யாழ் நகர கிளையை ஆரம்பித்தது முதல் தனது இரண்டாவது பிரிவு மாணவர்களை பரீட்சைக்குத் தயார் செய்துள்ளது. இவ் விண்ணப்பக் கோரலானது நான்காம் பிரிவுக்கானது.

ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளைக் கொண்டது.

1. **Diploma** – 6 மாதம்
2. **DEGREE** – ஒரு வருடம்
3. **ACCA** – ஒரு வருடம்

- ✔ O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.
- ✔ HNDA, யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

விசேட புலமைப்பரிசில்கள் கீழ்க்காணும் பிரிவினருக்கு வழங்கப்படும்.

- ✔ உயர்தரத்தில் அதிவிசேட சித்திகள். (கணிதம், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகப்பிரிவு)
- ✔ யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்
- ✔ HNDA மாணவர்கள்

**விண்ணப்ப முடிவுத்திகதி 05th July 2013**
**புதிய பிரிவுகள் 06th July 2013 சனிக்கிழமை ஆரம்பமாகும்.**

Jaffna, 3 -1/2, Sirambiyadi Lane
[Off Stanly Road], Jaffna
**பரிந்துரைகளுக்கும், முறைப்பாடுகளுக்கும் :**
077-2555814

**மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்**
077-3722104, 021-2219422.

### யாழ்ப்பாணத்தில் ACCA தகைமை பெற விரும்பும் மாணவர்களுக்கு K-AIMS உதவுகிறது

ACCA கற்கைநெறிக்கான ரியூசன் வழங்குநராக 2009 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டு பரிசுகளை வென்றெடுத்த பலரை உருவாக்கியதன் மூலம் ACCA மாணவர்களுக்கு உறுதியான அடித்தளமிட்டு வருவது குறித்து நன்மதிப்பைப் பெற்றுள்ள K-AIMS வட பிராந்தியத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி தற்போது யாழ்ப்பாணத்தில் கிளை ஒன்றை திறந்துள்ளது.

ACCA நிறுவகமே யாழ்ப்பாணத்தில் கிளையை கொண்டிராத நிலையில் Gold அங்கீகாரத்தை பெற்ற ACCA ரியூசன் வழங்குனரான K-AIMS அங்கு ACCA கற்கைநெறியை கற்கும் அனைவரும் கொழும்பில் கற்பவர்களுக்கு கிடைக்கும் அதே தரத்தை பெற்றுக்கொள்வார்கள் என்றும் பலமான தொழில்வள வாய்ப்புக்களுடன் தேவையான கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் உறுதி கூறுகின்றது.

யாழ்ப்பாணக் கிளையில் நவீன வசதிகளுடன் விசாலமான குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள் தனித்தனியான கற்கைப் பகுதிகள், நூலகம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. வார இறுதி நாட்களில் வசதியான நேரங்களில் சிறு வகுப்புகளை நடத்துவதிலும் K-AIMS அக்கறை காண்பித்து வருகிறது. எங்கள் மாணவர்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்துவதுடன் கற்பித்தலிலும் கற்றலிலும் மாற்றமடையும் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப புதுமைகளை புகுத்தி வருகின்றோம். மாறிவரும் உலக சந்தைக்கு ஏற்ற வகையில் புதிய வழிகளை உருவாக்குவதற்கும் முக்கியத்தும் கொடுக்கின்றோம். இந்த பிராந்திய மாணவர்கள் நிதித் துறையில் அவர்களது தொழில்வள அபிலாஷைகளை அடைவதற்கு உதவி வருகின்றோம்.

நாட்டின் சகல பிராந்தியங்களிலும் உள்ள மாணவர்களுக்கு நன்மை பயப்பதற்காகவும் தொழில்துறையினதும் தொழில் தருநர்களினதும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ACCA இல் கல்வி கற்று தகைமை பெற்றுக்கொள்ள வாய்ப்பு அளிப்பதற்காகவும் தனது ஆற்றல் எல்லையை விஸ்தரிப்பதற்கான பல திட்டங்களைக் கொண்டுள்ள ACCA வின் நோக்கங்களை அடிப்படையாக வைத்தே எமது முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் கணக்குத்துறை மூலதன சந்தைகள், முதலீட்டு வங்கியியல் அல்லது நீதி ஆலோசகதுறை ஆகிய எதிலாயினும் அவர்களது திறமையை காண்பிப்பதற்கு பல வாய்ப்புகளை கொடுப்பதாக இந்த முயற்சிகள் அமையும்.

**முகவரி :** இல. 3 1/2, சிறாம்பியடி லேன்,
(ஸ்ரான்லி வீதி வழியாக) யாழ்ப்பாணம்.
**தொ.பே: 0772555814**

(சி-3784)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org